பல்சுவை
# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

நவம்பர் 2018



## கலைச் சிற்பங்களின் காதலன் சசிதரன்



நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

தோற்றம் 1972

நவம்பர் 2018




விரைவில் ...





*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
**அமின் மொஹமெட்**
*இணையாசிரியர் :*
**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**
*நிர்வாக ஆசிரியர் :*
**சஃபி மொஹமெட்**
*ஆசிரியர் குழு :*
**ஹிப்ஸுர் ரஹ்மான்**
**நெல்லை உலகம்மாள்**
**வசந்தி ஆதித்தன்**
**கவிஞர் அ.முத்துசாமி**
**கவிஞர் ஈழபாரதி**
**கவிஞர் பாலமுனை பாறூக்**
*ஆலோசகர்கள் :*
**“பைந்தமிழசு“ பாவலர் மா. வரதராசன்**
**கவிதாயினி சக்தி ஜோதி**
**கவிதாயினி அமுதா பொற்கொடி**

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.
4, Sengeniyamman kovil street, Solainagar, Muthialpet, Pondichery - 605 003. India.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.




## பரல்கள் - கவிஞர் வ.க. பரமநாதன்

நமது பாரம்பரியக் கவிதை வடிவங்களை உள்வாங்கி, மரபு மாறாமல் கவிபுனைவது எல்லோருக்கும் சாத்தியமாகாது. அது பரமநாதனுக்கு வாய்த்திருக்கிறது. அவர் மரபு வடிவங்களில் நின்று கொண்டு புதிய கருத்துகளைச் சொல்ல முனைகிறார். இவருடைய கவிதா வீச்சு டென்மார்க்கைத் தாண்டி, ஈழம், தமிழ்நாடு என அறியப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது சிறப்பாகும்.

வெளியீடு:
Silver Print House, Mississauga, Ontario L5V 2G7 Canada.




## மனிதநேயத் துளிகள் - ஹைக்கூ கவிதைகள்

கவிஞர் கா.ந. கல்யாணசுந்தரம் வங்கிக் காசாளர் என்பது இவரது வளமார்ந்த வாழ்வின் இன்னொரு இனிய பக்கமாயிருக்கிறது. மொழிக்கு மெருகேற்றுகிற பணியில் மட்டுமல்ல, மொழிக்கு முறுக்கேற்றுகிற முயற்சியிலும் இவர் வெற்றி பெறுவது தமிழ் பெற்ற பேறு. பல்வேறு சுவைகள், சிந்தனைகள், சாடல்கள் செறிந்த கவிதைகளை இத்தொகுதியில் காண்கிறோம்.

வெளியீடு:
நம்மொழி பதிப்பகம், சென்னை, தமிழ்நாடு
email : kaviooviya@gmail.com




## மகளுக்கு - கடிதங்கள், கவிதைகள் & கட்டுரைகள்

நிஜனியின் சிறுவயதிலிருந்து அவளது ஆளுமையை வளர்த்தெடுத்ததில் வெங்கட் (நூலாசிரியர்) டின் கடிதங்களுக்கு பெரிய பங்கு உண்டு. அவரது அத்தனை கடிதங்களையும் பத்திரமாய் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் காரியத்திலிருந்து நிஜனி காட்டும் நேசத்தின் நீளத்தையும் பொறுப்புணர்ச்சியையும் புரிந்துக் கொள்ள முடிகிறது. அப்பாவும் மகளும் பரஸ்பரம் காட்டும் அன்பு இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வெளியீடு: நிஜன் பதிப்பகம்.
5A, ஸ்ரீனிவாசா அவென்யூ, வளர்நகர், மதுரை.



# கற்பிதங்களைத் தகர்த்தெறியும் பெண்ணுரிமைக்கான உட்சபட்ச தீர்ப்பு

கற்பிதங்கள் பல. சாதி, மதம், சமூகம் கடவுள்,அரசியல் போன்ற பல தளங்களிலும் இது இயங்கு பொருளாகவிருக்கிறது. இந்த உலகை பெரும்பான்மையாக ஆள்வது கற்பிதமே. கற்பிதங்களே பல சிக்கல்களை உருவாக்குகின்றன. இந்தக் கற்பிதங்கள் மிகையாகதமிழ்ச்சமூகத்தில்பரவலாகப்படர்ந்து கிடக்கின்றன. சமூகத்தைப் புரையோடச் செய்து கொண்டிருக்கின்ற இத்தகைய கற்பிதங்கள் மனிதனைத் துன்புறுத்தவும், வாழ்க்கையைச் சிக்கலாக்கவுமான பணியையே செய்துவருகின்றன. சபரிமலைக் கோயிலுக்குப் பெண்கள் போகக்கூடாது என்பதும் ஒரு கற்பிதமே.

இத்தகைய சூழலில் கடவுள் குறித்த கற்பிதத்தை உடைத்து நொறுக்கும்வகையில் ஒரு தீர்ப்பை இந்திய உச்சநீதிமன்றம் வழங்கியிருக்கிறது. அதாவது சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு எல்லா வயது பெண்களும் செல்லலாம் என்பதே அது. உச்ச நீதிமன்றத்தில், தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையில், ஆர்.எப்.நாரிமன், டி.ஒய். சந்திரசூட், எம்.கன்வில்கர் ஆகியோருடன் அந்த அமர்வில் ஒரு பெண் நீதிபதி இந்து மல்கோத்ராவும் இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அந்த அமர்வில் ஒரு பெண் நீதிபதி தவிர்த்து, நான்கு நீதிபதிகள் ஒன்று சேர்ந்தளித்த தீர்ப்பின் விவரம் இதோ...

1. சபரிமலையில் பெண்களுக்குத் தடை விதிக்கும் நடைமுறையை ஏற்க முடியாது.

2. குறிப்பிட்ட வயதில் பெண்களுக்குரிய, உடல் ரீதியான மாற்றத்தைக் காரணம் காட்டி, அக்கோயிலில் நுழைய தடை விதிப்பது, பெண்களின் உரிமைகளைப் பறிக்கும் செயல்.

3. மதரீதியான வழிபாட்டு நடைமுறைகள் என்ற பெயரில், பெண்களுக்கான வழிபாட்டு உரிமைகளை மறுப்பதென்பது அவர்களின் சுயத்தை, கவுரவத்தை இழிவுப்படுத்துவதாகும்.

4. வழிபாட்டுமுறைகளில்ஆணும்பெண்ணும் எனப் பிரித்துப்பார்ப்பது தவறானது. எனவே ஆணும்பெண்ணும் சமம் என்பதை உறுதி செய்யும் வகையில் சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்கப்பட வேண்டும்.

5. வழிபாட்டு முறையில் பெண்ணின் உடலியல் மாற்றங்களைக் காரணம் காட்டி சபரிமலையில் பெண்கள் செல்ல தடை விதிப்பது, அரசியல் சாசன சட்டத்திற்கு எதிரானது.

6. அய்யப்ப பக்தர்கள் சங்கத்தினர், தங்களுக்கென தனியான வழிபாட்டு நடைமுறை விதிகளைப் பின்பற்ற முடியாது.

ஆனால், உச்சநீதிமன்ற நீதிபதியும், இந்த வழக்கை விசாரித்த ஐவரில் ஒருவரான பெண் நீதிபதியுமாகிய இந்து மல்கோத்ரா, ஒருவர் மட்டுமே மாறுபட்ட

கருத்தை முன்வைத்தார். அதாவது நம் நாட்டில் பல்வகைப்பட்ட மதங்களைச் சேர்ந்தோர் வாழ்கின்றனர். பல்வகை வழிபாட்டு முறையை கடைபிடிக்கின்றனர். ஆழமான மதநம்பிக்கை அடிப்படையிலான விசயங்களை, மதசார்பற்ற நிலைப்பாட்டுடன் தொடர்படுத்த முயற்சிக்கக்க கூடாது. அய்யப்ப பக்தர்கள், சங்கங்கள் அவர்கள் நடைமுறையைப் பின்பற்ற அனுமதிக்க வேண்டும் என்பதாகும். இருப்பினும் மேற்கூறிய நான்கு நீதிபதிகளின் தீர்ப்பே அமுல்படுத்தப்பட்டிருக்கிறது என்பது பெருமையே.

இத்தீர்ப்பின் சாராம்சத்தை நோக்கும் போது பெண்ணின் தனிச்சிறப்புத் தன்மையான மாதவிடாய் முன்வைக்கப்பட்ட நிலையில், அதைத் தீட்டு என ஒருசாரார் வாதிடுவதை அத்தீர்ப்பு மறுப்புக் குள்ளாக்கியிருக்கிறது. தீட்டு, புனிதம் என்கின்ற கற்பிதங்களின் முரண்பட்ட போராட்ட வடிவமாக இதனைப் பார்க்க வேண்டியிருக்கிறது. தீட்டு என்பது தீண்டத்தகாத இழிசெயல் போன்றும், கோயில் புனிதம் என்பது மேன்மை பொருந்திய நற்செயல் போன்றும் கற்பிக்கப்பட்டு வந்திருக்கும் நிலையில், பெண்ணின் தீட்டு கேள்விக்குட்படுத்தப்படுகிறது. பெண் இனத்தின் மாதவிடாய் குருதி சேமிப்பே மனித, மற்றும் பிற உயிரினங்களின் பரிணமிப்பு என்பதை எவ்வாறு இந்த உலகம் மறந்து வாழத் தலைப்பட்டிருக்கிறது என்பதே ஆச்சர்யப்பட வைக்கிறது. உண்மையில் சொல்லப்போனால் பெண்களின் மாதவிடாயைத்தான் நாம் புனிதமாக்க் கொண்டாட வேண்டும். மாறாக பெண்களுக்கு உண்டான மாதவிடாய் காலத்தைக் காட்டி, 10 முதல் 50 வயதுக்குட்பட்ட பெண்கள், சபரிமலைக்குச் செல்ல தடைவிதிக்கும் தேவஸ்வம் போர்டின் செயல், அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்ற தீர்ப்பு ஒருவகையில் நமக்கு நம்பிக்கையளிக்கிறது. அதோடு ஆண்கள் மட்டுமே ஐயப்பன் கோயிலுக்கு செல்லலாம் என்ற நடைமுறையைத் தகர்த்திருப்பதும் காலத்தின் தேவையாகிறது.

தேவஸ்தானம் போர்டு தலைவர் கே.பத்மகுமார், உச்சநீதிமன்றம் கூறிய தீர்ப்பை நிறைவேற்றும் கடமை தமக்கு இருப்பதாகக் கூறினாலும், இத்தீர்ப்பை அவரும் வரவேற்கத்

## ஹைக்கூ படர்பார்வை

அழகிய பூந்தோட்டம்
சின்னாபின்னமாகி விடுகிறது
கயமைத் தனம்...!
*
துளிர்க்கும் சிற்றின்ப வெறி
பறிபோய் விடுகிறது
இல்லறத்தின் நன்னெறி ....!
*
பெற்றப் பிள்ளைகள்
விடம் வைத்துக் கொல்கிறது
நொடியில் தொலையும் காமவெறி!
*
ஊட்டிய தாய்ப்பாலில்
விடம் இரண்டறக் கலக்கிறது
காமவெறி ....!
*
அலைபாயும் மனம்
முற்றாய் நிலைமாறிப் போகிறது
மனித குணம்....!
*
ஒன்றுமறியா பச்சிளங்கள்
கொன்றுக் களிக்கின்றன
காமத்தின் நாற்றக் கொப்புளங்கள்....!
*
தாயின் காமக் கொலை
படம்பிடித்துக் காட்டுகிறது
சமூகத்தின் நவீன எல்லை!

மாதவன்



தயாராக இல்லை என்பதையும் செய்தியில் தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் சபரிமலை ஐயப்பன் கோயில் பெண்கள் வழிபட அனுமதித்திருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து கேரளாவில் கண்டனப் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், சாலை மறியல் போன்ற தொடர் போராட்டங்கள் என நாளும் திட்டமிட்டு நிகழ்ந்து வருகின்றன. அய்யப்ப பக்தர்கள் சங்கமும் திருவனந்தபுரம் நாயர் சர்வீஸ் சொசைட்டி சங்கமும் இணைந்து மிகப் பெரிய அளவில் பெண்களை அணிசேர்த்து நடத்துவது இங்கு கவனிக்கத்தக்கது. எர்ணாகுளம், மூவட்டுப்புழா,ஆலுவாப்பகுதிகளில்போராட்டம் நடந்தபோது போராட்டக்காரர்களுக்கும் பொதுமக்களுக்குமிடையே பிரச்சினை ஏற்பட்டி ருக்கிறது. அய்யப்ப பக்தர்கள் சங்கமும் நாயர் சொசைட்டி என்கிற இருசங்கங்களும் ஆளுங்கட்சிக்கு எதிரான, மரபு பின்பற்றலுக்குச் சார்பான, மேலும் பி.ஜே.பிக்கு ஆதரவான கொள்கையைக் கையிலெடுத்திருக்கிறார்கள் என்றும் சொல்லமுடியாது.

இந்நிலையில் கேரள தேவம்சம் போர்டு அமைச்சர் கடக்கம்பள்ளி சுரேந்திரன் "வழிபாட்டு முறையில் பெண்களுக்கானச் சம உரிமையைப் பெறுவதற்காக நடந்த சட்டப் போராட்டத்தில் வெற்றி கிடைத்துள்ளது சபரிமலையில் மட்டுமின்றி எல்லா வழிபடு தலங்களிலும் பெண்களுக்குச் சம உரிமை வழங்கப்படவேண்டும்'' என்றும் செய்தியாளர்களிடம் கூறியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. மேலும் தேவஸ்வம் அமைச்சர் அவர்களுக்குப் பா.ஜ.க தொண்டர்கள் கருப்புக்கொடி காட்டினர் என்பதும் நடந்தேறியது.

இவ்வாறிருக்க வரும் நவம்பர் 17 ஆம் தேதி மண்டல மகரவிளக்கு திருவிழா நடக்கவிருக்கிறது என்பதை தேவசம்போர்டு அறிவிப்பு செய்துள்ளது. பெண்கள் சபரிமலை வருவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்ய நீதிமன்றம் உத்திரவிட்டபோதும் ,பெண்கள் சபரிமலை செல்ல, இருமுடி கட்டமாட்டோம் எனச் சபரிமலை அய்யப்ப சேவா சமாஜ மாநிலத் துணைத் தலைவர் சாமி உறுதியாகத் தெரிவித்து உள்ளார். மேலும் இதை மறு பரிசீலனை ச் செய்ய வேண்டும் என சென்ற 11 ம் தேதி அய்யப்பப் பக்தர்கள் பங்கேற்கும் ஊர்வலம் பெரியார் பிறந்த ஈரோட்டிலும் நடந்திருக்கிறது. இங்கும் புதுவைதோறும் அய்யபபபக்தர்கள் சங்கம் போஸ்டர் ஒட்டி தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். 10 வயதுக்குட்பட்டவர்களும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களும் ஐயப்பன் கோவிலுச் சென்று வரலாம் என்ற விதியை உருவாக்கியது என்ற கேள்வி நம்முள் எழுகிறது. இது எழுதப்படாதச் சட்டமாக ஆணாதிக்க சமூகத்தில் நடமாடிய ஒரு கற்பிதம் என்பதை இத்தீர்ப்பு வெளிச்சமிட்டு க்காட்டியிருக்கிறது.

"இத்தீர்ப்பின் மூலம் நூற்றாண்டு காலமாக இருந்து வந்த மனிதர்க்குள்ளான தவறான வேறுபாடுகள் அகற்றப்பட்டுள்ளது. ஆண்,பெண் இருவருமே மனிதர்கள்தாம், எனவே இத்தீர்பை வரவேற்கிறேன்'' என புதுவைக் கவர்னர் கிரண்பேடி இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

சபரிமலை கோவிலில், அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்கலாம் என்ற உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வரவேற்கத் தக்கது. இதன் மூலம், பெண்களின் உரிமை நிலைநாட்டப் பட்டுள்ளது. ஹிந்து மதத்தைச் சேர்ந்த பெண்களுக்கு மகிழ்ச்சி அளிக்குமென்று நம்புகிறேன் என்று மத்திய பெண்கள் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் மேனகா (பா.ஜ.க.) கூறியுள்ளார். மேற்கூறிய இருவரும் மதசார்புள்ளவர்கள் என்பதும் இத்தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதையையும் கவனத்தில் கொண்டால், ஒரு குறிப்பிட்ட சார்புடையவர்களே புரிதலின்மையால் இத்தீர்ப்பை மறுக்கிறார்கள் என்பது புரியும்.

ஆக இத்தீர்ப்புக்கு எதிராகச் செயல் படுகிறவர்கள், சங்கங்கள், மதவெறியர்கள் ஆகியோர் கற்பிதத்தின் அடிப்படையில், பெண்கள் உரிமைகளை இன்னமும் கூட ஏற்கத்திராணியற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதையே நமக்குக் காட்டுகிறது.

முனைவர்.
பெண்ணியம் செல்வக்குமாரி
புதுச்சேரி.



# நளவெண்பா காவியம்

இராமதாஸ் காந்தி

கலியுடை வெம்மை வந்து
கனலென வெந்து தீய்ந்த
வலியுடை நலனின் வெண்பா
வாய்மையின் புலவன் சொன்ன
உளியென செதுக்கச் செய்த
ஒப்பிலா காவி யந்தான்
நலிவுடன் நாட்டை விட்டு
நாட்டினான் வெற்றி யன்று

அன்னத்தை தூது விட்டு
அன்புடை மனைவி பெற்றான்
மன்னவன் என்ற போதும்
மாறிடா தமயந் திக்கே
முன்னரு நாளில் மன்றில்
மணமகன் தேர்வு செய்ய
பன்னாட்டு மன்னர் ஈங்கு
பார்த்திடா தமயந் திக்கு

நலனிவன் கழுத்தில் மாலை
நதியென சூட்டிச் சென்றாள்
உலமுடை காதல் கொண்ட
உற்றவோர் துணையை பெற்றாள்
கலியுடன் கோபம் கொண்டான்
கயவனாய் பிரிக்க எண்ணி
பலியென நலனின் வாழ்க்கை
பார்வையால் தீய்க்கச் செய்தான்

சனியுடை பார்வை பட்டு
சாய்ந்தது நளனின் நாடு
தனியென சூதில் தோற்று
தளர்ந்தனன் மனைவி யோடு
மனைவியின் ஆடை யோடு
மயக்கமே கொண்டவன் போல்
கானகம் மனைவி விட்டு
காரிருள் வடிவு கொண்டான்

தமயந்தி தந்தை நாடு
தனியென சென்ற போது
அமைந்த வோரு வாழ்க்கை
அளவிலா துன்பம் என்று
இமைதனில் தூக்க மில்லை
ஏங்கினல் தலைவன் நோக்கி
சுமையென மகவு ரெண்டு
சூழ்ந்தவோர் துயரம் இன்னும்

நளனிவன் தேரில் வல்லோன்
நாதனாம் சமையல் செய்ய
கலைகளில் உயர்ந்த தாலே
காதலி நாட்டில் சேர்ந்தான்
நிலையென வேலை செய்து
நிறைவுடன் சமையல் செய்து
உலகுடை கலியின் ஆற்றல்
ஓடிட மறைந்து வாழ்ந்தான்

மடப்பள்ளி பிள்ளை வந்து
மனமுடன் அன்பு பூண்டான்
நடைமுறை மதிப்பு பொங்க
நானொன்று கேட்பேன் சொல்வாய்
விடையென கூறு வாயே
வீரனாய் உன்றன் நாடு
தடையென் னவாழ்வு காண
தளிர்களே கூறு வீரே.

உன்னுடை தந்தை விட்டு
உவப்புடை நாடு விட்டு
சொன்னவோர் புகழை விட்டு
சுவையிலா பாட்ட னாடு
மன்னவன் மகனும் இன்று
மடிவது என்ன மாண்பு
என்றவன் சொல்லை கேட்டு
எழுந்தனன் சினமும் பொங்க

மன்னவன் மாண்பு உன்போல்
மடையரும் அறிய மாட்டார்
என்னுடை தந்தை நாடு
ஏற்றமே செழித்து வாழும்
பொன்னறம் செழித்து ஓங்கும்
புதுமையாம் தேசம் கேட்பீர்
தன்னல சூதி னாலே
தளர்வென வந்த தின்று



## அஃறிணைகள் மேலடா

தாய்ப்பாசத்தில் என்னடா
உயர்திணை அ.ஃறிணை
உயிரைத் தவிர
அனைத்திலும் பிரிவினை!
தாய்ப்பால் கொடுத்தாள்
உயர்திணை
தாய்ப்பால் கொடுத்தது
அஃறிணை!
தாய்ப்பால் கொடுக்க
வெட்கப்பட்டா(ல்)ள்
அது
உயர்திணை!
தாய்பாலைத் தவிர
வேறேதும் கொடுக்காதது
அது
அஃறிணை!
குழந்தையை
குப்பைத் தொட்டியில்
வீசியெறிந்தால்
அது உயர்திணை!
எது தன்னுடைய
முட்டை எனத்தெரியாமலே
அடை காத்தால்
அது அஃறிணை,
சாதிபேதம் பார்த்தில்லை
கள்ளக்காதல் புரிந்ததில்லை
கள்ளிப்பால் அறிந்ததில்லை
தாய்பாலூட்டத் தவறியதில்லை!
குட்டி உண்ணாமல்
உண்டதில்லை
குட்டியை விட்டுப்
பிரிந்த்தில்லை!
சீர்தூக்கிப் பார்க்கையிலே
உயர்திணைகள் பள்ளத்திலே
அஃறிணைகள் வானத்திலே
ஆண்டவனின் படைப்பினிலே!

க.தி. ரமேஷ்கார்த்திக்



# இது காதலில்லை!! அதனாலென்ன?

பேச்சின் நடுவே விரசமின்றி
«லவ்யூ» சொல்லலாம்..
கேட்டதும் பிடித்து போன
பாடலொன்றை
வாட்சப்பில் அனுப்பி
கேட்கச்சொல்லலாம்..
மழை நாளொன்றின் ஜன்னல்
தூறல்களை
கண்கள் மூடி ரசிக்கச்சொல்லலாம்..

இது காதலில்லை!!
அதனாலென்ன??

பிடித்த நிறத்தில் உடையணியச்சொல்லி
கேட்டுக்கொள்ளலாம்..
உரிமையாய் விருப்பு வெறுப்புக்களை
பகிர்ந்து கொள்ளலாம்..
விளையாட்டாய் இருவரின்
பாஸ்வேர்ட்'களையும்
மாற்றிக்கொள்ளலாம்..

இது காதலில்லை!!
அதனாலென்ன???

யாரின் செல்ஃபி'க்கோ ஹார்ட்டின்
விட்டதற்காய்
கடுப்பாகி ஓஃப் லைன் போகலாம்..
நீண்ட காத்திருப்புக்குப்பின்
பதிலளிக்கப்படும் குறுஞ்செய்திக்காய்
கோபப்படலாம்..
நள்ளிரவில் அழைப்பெடுத்து
பேசச்சொல்லி
இம்சை செய்யலாம்..

இருந்தும்..
நிச்சயமாய்
இது காதலில்லை!!
அதனாலென்ன??

- ரிஸ்கா முக்தார்

# எனக்கு வெளியே ஓர் உலகம்

**- கீர்த்தனா**

ஓர் அடர்ந்த காட்டின் நடுவே நிசப்தமான இரவில் காட்டு யானையும் ஓநாயும் தன்னுடைய நண்பர்களுடன் கொண்டாடிய கொண்டாட்டத்தின் சிரிப்பு சத்தமும் ஆவிகளுடன் ஏதோவொன்று பேசியது போல் வேற்றுக்கிரகவாசிகளாக மனிதனால் பிணைக்கப்பட்ட அமானுஷ்யமும் தன்னை தொடர்வது போல் யாருமற்ற தனிமையில் படுத்திருந்த முகில் வியர்வை துளிகள் சொட்ட சொட்ட எதையோ பார்த்து பயந்து கனவிலிருந்து எழுந்து அமர்ந்தான்.

தூக்கத்தை கனவுக்கு கடனாக அளித்த முகில் தனது சட்டைபையில் சிகரெட் துண்டை எடுத்து மெதுவாக வாசலுக்கு வந்தான்...

சற்று தூரத்தில் எரியும் ஒளியின் அழகை ரசித்தானோ என்னமோ ஆனா ரசிக்கின்ற மாதிரி புகையின் வடிவம் காட்சியளித்தது...

திடீரென்று டிரிங் டிரிங் டிரிங் ...

உள்ளே சென்று அலைபேசி எடுத்து நாளை வருகிறேன் என்று சொல்லிவிட்டு போனை அமத்திவிட்டான்.

விடிந்தது அன்றாட வாழ்க்கையில் பயணித்தான்.. அரக்கபரக்க குளித்தான் ஆவி பறந்து ஆரிப் போன காஃபியை குடித்தான். அவனுக்காக இல்லாமல் பசிக்காக ரெண்டு ரொட்டியை சாப்பிட்டான்... அதே இரைச்சலான சத்தத்தின் நடுவே தன்னுடைய அமைதியான மண்டை கவசத்திற்கு இடையே செவியை அமர்த்திக் கொண்டு போய்ச்சேரும் இடத்தை சென்றடைந்தான்.

நுழைவாயில் இருந்த செருப்பின் எண்ணிக்கையிலே வீட்டின் உள் நடமாட்டத்தை உணர்ந்தான்.

பழங்கள் நிறைந்த தட்டுகளும் பூக்களும் மிட்டாய்கள் வாழைப்பழங்கள் இனிப்புகள் கற்கண்டு சந்தனம் குங்குமம் இத்தனையும் ஒத்த ஜம்முகாளத்தில் உள்ளடக்கிய தட்டுகளும்... ஆங்காங்கே வயதானவர்களின் பட்டிமன்ற பேச்சுகளும், குழந்தைகளின் ஓட்டங்களும், ஜொலிக்கும் வண்ணப் புடவைகளில் ஒழிந்திருந்த பெண்களும், கண்ணைப் பறிக்கும் நகைகளும், முகிலுக்கு ஒன்றுமே புரியவில்லை..

வாப்பா இப்போ தான் வந்தீயா என்ற அம்மாவின் வரவேற்பும்! சாப்பிட்டியா ஐயா என்ற அப்பாவின் அன்பும்! வா அண்ணா ஏன் இவ்வளவு லேட் என்ற தங்கையின் காத்திருப்பும்



வார்த்தைகளை
விழுங்கி
வழிகின்ற
மோன மூச்சின்
வெப்பத்தில்
தெப்பமாய்
நனைந்தேனடி!

சிராஜ் அஹ்மெட்



# அவன் இரக்கமற்றவன்

**அவன் இரக்கமற்றவன் தான்**
**அந்த ஒரு நொடிக்காக**
**இத்தனை நீண்ட காலமாக**
**காத்திருக்க வைத்தான்—**
**அவன் இரக்கமற்றவன் தான் ...**
**எல்லாவற்றிலும் என்னை**
**முந்தியிருக்க வேண்டுமென்றே**
**நினைப்பாவன்.**
**அவன் என் மீது**
**அன்பு செலுத்தும் போதும்**
**கோபபடும் போதும்**
**எந்த ஒரு பாகுபாடுமின்றி**
**அவன் என்னை ஒரு ஆணாக**
**நினைத்து செயல் படுவான்.**
**நான் அனைத்தையும்**
**பொருத்துக் கொண்டு தான் இருந்தேன்.**
**அந்த ஒரு நொடிக்காக ...**
**ஆனால் அந்த ஒரு நொடியவும்**
**தனதாக்கி கொண்டு மீண்டும் —**
**அவன் இரக்கமற்றவன்**
**என்பதை நிரூபித்து விட்டான்.**
**அன்பு செலுத்துவதை போலவே**
**அந்த ஒரு நொடியில்**
**நிகழும் மரணத்தை —**
**என் மடி மீது தலை வைத்தே**
**மரணத்தையும் தனதாக்கி கொண்டான்.**
**என் இரக்கமற்ற காதலன்.**

மகிழ்ச்சி ஆ.ராம்குமார்

எதையோ அவனிடம் உணர்த்தியது.

அங்கிருந்து ஒரு குரல் பொண்ணக் கூப்பிட்டுட்டு வாங்கென்று அப்போது தான் புரிந்தது முகிலுக்கு தங்கையை பெண் பார்க்க வந்துள்ளார்கள் என்பது....

வழக்கம் போல் பெண்ணை பார்த்தார்கள் பிடித்திருக்கா என்றொரு கேள்வியும் கேள்வியைக் கேட்டு அவர்களே பதிலும்.. கூட்டத்தில் ஒன்றுக்கு இரண்டு இப்படி தான் போல...

இவள் யாரென்று சொல்லவே இல்லையே என்ற விமர்சனம் நிறைந்த கேள்வி பெண் வீட்டாருக்கு தூக்கிவாரிப் போட்டது.. பெண்ணின் தகப்பனார் இவன் என் மகன் என்றார்!! மகனா விளையாடதீங்க பெண் போல் உள்ளாள் என்ற மற்றொரு விமர்சனம் மற்றொருவரிடமிருந்து...

என்னச் சொல்வது உண்மையை சொன்னால் கல்யாணம் நின்று போகும் என்ற கவலையில் பெண் வீட்டார்கள் ...பொய் சொன்னால் தங்கையின் வாழ்க்கை கல்யாணத்துக்கு பின் கேள்விக்குறி என்ற பதட்டத்தில் முகில்.

நான் ஒரு திருநம்பி என்ற வாக்கியத்தில் முகிலின் பாலினத்தை சொல்லி அதற்கு பெற்றோர் ஆதரவு என்பதையும் மற்றவர்களின் வசைவுகளுக்கு ஆளாக வேண்டாமென்று தன் மகனை ரூம் எடுத்து தங்க வைத்து அவனுக்கு ஏற்ற வேலையும் அமைத்துக் கொடுத்துள்ளார்கள் என்பதை யாவரும் முகிலின் அழுத்தமான குரலில் அறிந்தார்கள்.

சபையில் வாய் மூடாது !மூடிய வாய் திறக்காது !சற்று ஒரு நிமிடம் மயான அமைதி நிலவியது...

ஆங்காங்கே அரசல்புரசலான பேச்சுகளும் ஒருவர் பின் ஒருவராக நகர்ந்ததும் தெரிந்தது.

பின் அனைவரும் எழுந்து மாப்பிள்ளையின் தாயார் சென்று பதில் அனுப்புகிறோம் என்று சொல்லி கிளம்பினார்கள்.

# உயிர்...



நௌஷாத் கான். லி
அபுதாபி

டாக்டர் எப்படியாவது இந்த கருவை கலைச்சிடுங்க... ப்ளீஸ் எங்க ரெண்டு பேரோட வருங்காலமும் இதுல தான் அடங்கி இருக்கு. எனக்கு எங்கேஜ்மெண்ட் வேற பிக்ஸ் ஆயிடிச்சு. இன்னும் மூணு மாசத்துல எனக்கு கல்யாணம் வேற நடக்க இருக்கு. என் பாய் பிரண்ட்டும் இன்னும் ரெண்டு மாசத்துல வேலைக்கு அமெரிக்கா போக போறான் .

நானும் என் பாய் பிரெண்ட்டும் தெரியாம ஒரு திரில்க்காக தப்பு பண்ணிட்டோம். எவ்வளவு சொல்லியும் கிக்குக்காக காண்டம் போடாம என்னோடரிலேஷன்சிப்வச்சுக்கிட்டான்.அதோட விளைவு நான் இப்ப கன்சீவ்வா இருக்கேன்னு நினைக்குறேன் டாக்டர். ஏன்னா எனக்கு ரெண்டு மாசமா பீரியட்ஸ்ஸே வரலை கண்டிப்பா நான் கன்சீவ்வா தான் இருக்கேன்.

ப்ளீஸ் எப்படியாவது இந்த கருவை கலைச்சிடுங்க... உங்களுக்கு எவ்வளவு பணம் வேணும்னாலும் தர்றோம் என்றனர் அந்த இருவரும்.

பணத்திற்கு ஆசைப்பட்ட அந்த டாக்டரும் அபார்சன் செய்தார். அதன் பின் அந்த பெண்ணும் - அந்த ஆணும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர். இனிமேல் அவரவர் வாழ்க்கையில் மீண்டும் ஒருவரையொருவர் சந்தித்து கொள்ள கூடாது என்றும், அவர்களது வருங்கால வாழ்க்கையில் ஒருத்தருக்கு ஒருத்தர் இனிமேல் தலையிட கூடாது என்றும் நட்புடன் பரஸ்பரமாய் உடன்படிக்கை செய்து கொண்டு பிரிந்தனர்.

ஒரு சில மாதங்களுக்கு பிறகு...

ஒரு அறுவை சிகிக்சையின் போது மத்த சக மருத்துவர்களின் முன்னிலையில் தன் கைகளின் நரம்புகளை தானே வெட்டி கொண்டார் அந்த அபார்சன் செய்த டாக்டர். அந்த சம்பவத்தில் இருந்து அந்த மருத்துவரின் இரு கைகள் செயலிழந்து போனது.

டே... மச்சான் நாளைக்கு நான் அமெரிக்கா போறேன் வேலைக்கான அப்பாயின்மென்ட் லெட்டர் எல்லாம் வந்தாச்சு, இனிமே ஜாலி தான் என்று சந்தோசமாக அவன் நண்பனிடத்தில் பேசி கொண்டிருந்தான். அப்போது அருகே உள்ள ஜன்னல் கம்பி உடைந்து நேரே அவன் ஆண்குறியில் வந்து சொருகியது அந்த விபத்தில் அவன் ஆண் என்ற தகுதியையே இழந்தான் ...

ஒரு நாள் அவள் மிகுந்த சந்தோஷத்தில் இருந்தாள். ஏனென்றால் விடிந்தால் கல்யாணம், பையன் மிக பெரிய இடம். தன்னுடைய பிரச்சனையெல்லாம் தீர்ந்து விட்டது. இனிமேல் எல்லாமே நல்லாத்தான் நடக்கும் என்று பல கனவுகளில் மூழ்கி இருந்தாள். அப்போது அவளுடைய அறைக்கதவு தானே மூடிக்கொண்டது. அடுத்த நொடி அறையில் கட்டிலில் இருந்த தலையணையை எடுத்து முகத்தில் வைத்து தன்னை தானே அழுத்தி கொண்டாள். சில நிமிடங்களில் அவள் உயிர் அந்த அற்ப உடலை விட்டு போய் இருந்தது. அருகே இருந்த கண்ணாடியில் ஐ லவ் யூ அம்மா என்று இறந்து போனவளின் யோனியின் இரத்தத்தில் எழுதப் பட்டிருந்தது..

உலகை பார்க்காத உயிர் தான் உலகை பார்க்க முடியாத நிலைக்கு காரணமானவர்களை பழி தீர்த்து கொண்டது. உங்கள் உடல் சுகத்துக்காக உயிர் பலி வேண்டாமே...

# மனைவி எனும் துணைவி

மனைவி யென்னும்மாதரசி நாடும் அன்பை
மகிழ்வுடனே மதித்திடுவோம் அவளின் பங்கை
நினைவி லென்றும்நீங்காது நெஞ்சில் மேவும்
நித்தமவள் வழங்கிவரு மின்பம் யாவும்
சுனைநீராய் வற்றாமல் தியாகம் செய்வாள்;
சுரக்குமன்பால் மறவாமல் நியாயம் செய்வோம்!
பனைமரமாய் நற்பலன்கள் தருவாள் என்றும்
பகுத்தறிவைப் பயன்படுத்திச் செய்வோம் நன்றி!

சலவையையும் சளைக்காமல் செய்வாள்; ஊணும்
சமைத்திடுவாள்; இல்லத்தில் தூய்மைகாணும்
நிலவினைப்போல்வெளிச்சமாக்கிவைத்துக் காத்து
நிற்குமவள் செயலுக்குச்சொல்வோம் வாழ்த்து!
புலமையுடன் கூரறிவும்பெற்ற இல்லாள்
புத்தியுடன் கணவனுக்குவழியும் சொல்வாள்
கலவரமாய் முகத்தினில்ரேகைப் பார்த்து
கவலைகளும்போக்கிடுவாள் அன்பைஈந்து!

இல்லாளைமதிப்போர்க்குவாழ்க்கை இன்பம்
இல்லாத சந்தேகம்கொண்டால் துன்பம்
பொல்லாத பழிகளையும்நம்ப வேண்டா
பொய்சொல்லிஆபத்தில் சிக்க வேண்டா
நல்லோராய்க்குழந்தைகள் வளரவேண்டி
நாடோறும் கஷ்டங்கள்யாவும் தாண்டி
சொல்லொண்ணாப்பொறுமையினைநெகிழ்ந்து யோசி
சொர்க்கமெனக்கொண்டாடி மகிழ்ந்துநேசி!

**- அதிரை கவியன்பன் கலாம்**



தமிழர் சரித்திரத்தை நேசிக்கும் இளைஞர்.. சிலைகளின் காதலர்.. கல்வெட்டுகளை தேடுபவர்.. அணுக்கன் படைநாயகர்.. சிதிலமடைந்த சத்திரங்கள்.. கோவில்களில் உழவாரப் பணி செய்பவர்.. இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம்..

யாரிவர்...?

# கலைச் சிற்பங்களின் காதலன் சசிதரன்

வாருங்கள் அன்புத் தம்பி சசிதரனுடனான ஒரு நேர்காணல்.. இதோ அவருடனான கலந்துரையாடல்.. உங்களுக்காக வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்..

சாரதா சந்தோஷ்



■ உங்களோட பூர்விகம்.. குடும்பம் பற்றி சொல்லுங்கள்..

● என்னுடைய பூர்வீகம் திருவண்ணாமலை மாவட்டம் "மருதாடு" கிராமம், பின்னர் பணி நிமித்தமாக என்னுடைய தாத்தா காஞ்சி மாவட்டம் உத்திரமேரூர் என்ற ஊருக்கு வந்து குடியேறினார். தாத்தா, அப்பா இருவரும் "கிராம நிர்வாக அதிகாரிகளாக" இருந்து பணி ஒய்வு பெற்றவர்கள், அம்மா இல்லத்தரசி..

■ சரித்திரம்.. கல்வெட்டுகள்.. சிலைகளின் மீது எப்பொழுது முதன்முறையாக உங்களுக்கு காதல் ஏற்பட்டது..??

● சிறுவயதில் இருந்தே அதில் கொஞ்சம் ஆர்வம் இருந்தது, பள்ளி செல்லும் போது உத்திரமேரூரில் இடிந்து கிடந்த ஒரு கோயிலை ஏக்கத்துடன் கடந்து சென்றிருக்கிறேன். சமீபமாக 2011 ஆண்டு முதல் அது கொஞ்சம் தீவிரமான தேடலாக தொடர்ந்தது.

■ சோழர்கள் வரலாற்றில்.. உங்களுக்கு பிடித்த மன்னர் யார்.. ஏன்..?

● சோழ வரலாற்றில் பிடித்த மன்னன் என்றால் "ஆதித்த சோழனை" சொல்வேன், இன்றைக்கு அந்த நாகரீகத்தை பற்றி இவ்வளவு பேசுகிறோம் என்றால் அதற்கு விதை போட்டவன் அவன். ஆதித்தன் இல்லையேல் தஞ்சை பெரிய கோயிலும் இல்லை, கங்கை முதல் கடாரம் வரை வெற்றியும் இல்லை.

■ அணுக்கன்படைபற்றியும், சென்றவருடம் நடந்த கங்கை கொண்ட சோழபுரத்தின் குடமுழுக்கு விழாவில்... அணுக்கன் படை ஆற்றிய பணிகள் குறித்தும் சொல்லுங்கள்.

● அணுக்கன் படை கங்கை கொண்ட சோழபுரம் குடமுழுக்கிற்காக துவங்கப்பட்ட குழு, சோழர்கள் கல்வெட்டுகளிலேயே ''அணுக்கர்'' குறித்த குறிப்புகள் காணக் கிடைக்கிறது, அவர்கள் கோயில்களை பாதுகாக்கும் குழுக்களாக அன்றைக்கு இருந்திருக்கிறார்கள். அது இன்றைக்கும் தொடர்வது மகிழ்ச்சி அளிக்கிறது.

எப்படி அன்றைக்கு சோழர் படை கங்கை வரை சென்று வெற்றி கொடி நாட்டி அங்கிருந்து கங்கை நீரை தன் தலைநகருக்கு கொண்டு வந்ததோ, அதே போல் அணுக்கர் படையும் கங்கை சென்று அந்த நீரை கொண்டு வந்தது முதல், அதை ஊர்வலமாக கொண்டு வந்து கோயிலில் சேர்த்து, குடமுழுக்கு முடியும் வரை தன்னாலான பணிகளை சீரும் சிறப்புமாக செய்தது.

■ பண்டைய தமிழர் நாகரிகம்.. பண்பாடு.. கலைகள்.. அரசியல் எப்படி இருந்தன.. ஒரு கல்வெட்டு ஆதாரம் தாருங்களேன்..

● பண்டைய தமிழர் நாகரிகம்.. பண்பாடு.. கலைகள்.. அரசியல் போன்றவற்றை ஒரு கல்வெட்டில் அடக்கிவிட முடியாது. இந்தியாவிலேயே அதிக கல்வெட்டுகள் கிடைக்கும் மாநிலம் தமிழ்நாடு. குறிப்பிட்டு சொல்லவேண்டும் என்றால் அவ்வளவு பெரிய தஞ்சை கோயில் கட்டி முடிக்கப்பட்ட













பின், ராஜ ராஜன் தன்னுடைய உத்தரவில், தான் கொடுத்த கொடைகளையும், தன் அக்கா குந்தவை கொடுத்த கொடைகளையும், தன்னுடைய மனைவிகள் கொடுத்த கொடைகளையும் மற்றும் யார் யார் எல்லாம் இந்த கோயிலுக்காக கொடைகள் கொடுக்கிறார்களோ அவர்கள் அனைவரின் பெயரையும் கோயிலில் பதிய சொல்கிறார். இந்திய வரலாற்றில் இது போன்ற உத்தரவை வேற எந்த மன்னனும் பிறப்பித்தானா என்பது சந்தேகமே.

■ கல்வெட்டுகளின் தேடுதலில்.. ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி..

● காடு மேடு அலைந்து சில நேரங்களில் ஒரு பெரிய புதருக்குள் ஒளிந்திருக்கும் கல்வெட்டுகளை பார்ப்பதென்பது ஒரு திகில் படம் பார்க்கும் அனுபவம் தான். காவேரி பிரச்சனை உச்சத்தில் இருந்த போது ஒரு சமயம் கர்நாடகாவில் ராஜ ராஜன் கல்வெட்டை தோண்டி எடுத்தோம். அது இன்றைக்கும் பாதுகாப்பாக உள்ளது. ஆனால், அவர்கள் ஊருக்கு சென்று அவர்கள் முன் அதை எடுத்த போது கடந்த நொடிகள் ஒவ்வொன்றும் திகில் திரைப்படம் போன்று இருந்தது...

■ கோவில்கள்..சிலைகள்..கல்வெட்டுகளின் தற்போதைய நிலையென்ன..

● மத்திய தொல்லியல் துறை பராமரிக்கும் கோயில்கள் மட்டுமே சிறப்பாக உள்ளது, மற்ற கோயில்களில் கல்வெட்டுகளும் சிலைகளும் படும் பாடு சொல்லி மாளாது.

■ சிலை திருட்டுகளை தடுப்பது எப்படி..?!

● ஒவ்வொரு சிலைக்கும் தனித்தனி எண்களின் அடிப்படையில் குறியீட்டெண் கொடுக்கப்பட வேண்டும், எந்த கோயிலில் எந்தெந்த சிலைகள் உள்ளன என்பது குறித்த ஆவணம் அரசிடம் இருக்க வேண்டும். ஒரு வேளை சிலையைத் திருடி வெளிநாடு எடுத்துச் சென்றால் கூட நம்மிடம் அதன் புகைப்படமும், அவை எந்த கோயிலில் இருந்தது என்ற ஆவணமும்

இருந்தால் அதை எளிதாக மீட்டுக் கொண்டு வந்து விட முடியும்..

■ மரபுநடை என்றால் என்ன.. அதனால் ஏற்பட்ட மக்கள் விழிப்புணர்வை பற்றி சொல்லுங்களேன்

● பொதுமக்களுக்கு கோயில்கள், வரலாறு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த துவங்கப்பட்டதே மரபு நடை, ஒவ்வொரு இடங்களின் முக்கியத்துவம் அதன் வரலாறு குறித்து மக்களுக்கு தெரிந்தால் தற்போது இருக்கும் அவல நிலை மாறி, கோயில்களும் மற்ற வரலாற்று சின்னங்களும் புத்துயிர் பெறும்..

■ சமீபத்தில் நீங்கள் சென்று வந்த கம்போடியா பயணம் பற்றி கூறுங்கள்..

● உலகின் பெரிய வழிபாட்டுத்தலமான கம்போடியா செல்ல வேண்டும் என்பது நீண்ட நாள் கனவு. நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் ஒருமுறையேனும் கட்டாயம் சென்று பார்க்க வேண்டிய இடம். அங்கோர் வாட் கோயிலை மனிதர்கள் தான் கட்டி முடித்தார்கள் என்பதை இன்னும் நம்ப முடியவில்லை!.







■ நீங்கள் ஒரு இயற்கை ஆர்வலர் என்பதை அறிவேன்.. இதுவரை நீங்கள் செய்த நற்பணிகளை கூறுங்கள்..

● மரம் நடுவதற்கு எனக்கு எப்போதும் உறுதுணையாக இருப்பவர்கள் CTC சென்னை ட்ரெக்கிங் கிளப் நண்பர்கள், அவர்களுடன் இணைத்து 2012 காஞ்சிபுரம் அருகே அய்யங்கார்குளம் என்ற ஊரில் 500 கும் மேற்பட்ட மரங்களை நட்டு பராமரித்தோம், இன்றைக்கு அவை சிறப்பாக வளர்ந்து ஒரு காடு போன்று உருவாகியுள்ளது. பின்னர் அவர்களுடன் இணைந்து நிறைய இடங்களில் இது போன்று மரங்களை நட்டு பராமரித்தோம். கடந்த ஆண்டு காட்டுமன்னார்கோயிலில் நட்ட 200 கும் மேற்பட்ட மரங்கள் சிறப்பாக வளர்ந்துள்ளன, தற்போது நண்பர்களுடன் இணைந்து பனை விதை களை ஊன்றி வருகிறோம்.

■ இந்த சரித்திரப் பயணத்தில்.. தாங்கள் சந்தித்த சவால்கள் என்னென்ன..

● பொதுவாக எதையாவது தேடி பயணப்படும் பொழுது பெரிய சவால்கள் எதுவும் சந்தித்தது கிடையாது, மேற்கூறியது போல் கர்நாடகாவில் அப்படி ஒரு அனுபவம் கிடைத்தது. ஆனால், ஏதேனும் இடிந்த கோயில்களை சீரமைக்கும் போது தான் நிறைய சவால்கள் இருக்கும். ஊர் பிரச்சனை, அரசு பிரச்சனை, அரசியல் பிரச்சனை கடந்து, ஆயிரம் வருட பழைய கட்டிடங்களில் வேலை செய்யும் போது யாருக்கு எப்பொழுது என்ன நேரும் என்பது தெரியாது.

■ தங்களின் வாழ்நாள் இலட்சியம் என்ன..?

● இந்த உலகில் எதுவும் நிரந்திரமில்லை, இதில் நாமும் அடக்கம், ஆகையால் இறப்பதற்கு முன் இந்த தொல்லியல் துறையில் நிறைய ஆர்வலர்களை உருவாக்க வேண்டும், பொதுமக்களுக்கு இது குருதி நிறைய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்பதே.



■ இந்த எட்டு வருடப் பணிகளை ஆவணப் படுத்தியதுண்டா..?

● படங்களை மட்டும் சேகரித்து வைத்திருக் கிறேன்.. பத்திரிகைகள் என்னை அணுகும் பொழுது.. தருவதுதுண்டு, இது வரை பெரிய அளவில் எதையும் ஆவணப்படுத்தியதில்லை, பின் வரும் நாட்களில் புத்தகங்களை எழுதி அதில் ஆவணப்படுத்தும் எண்ணமுண்டு.

■ மறைந்த எழுத்தாளர் பாலகுமாரன் ஐயா என்றதும் நினைவில் வருவது..

● அவரின் எழுத்து தான் நினைவுக்கு வருகிறது.. சோழ வரலாற்றை பொதுமக்களுக்கு கொண்டு சேர்த்ததில் கல்கி அவர்கள் பெரும்பங்காற்றினார், பாலகுமாரனின் உடையார் அதன் தொடர்ச்சி எனலாம், கதைக்களம் வேறு ஒன்றாக இருந்தாலும் பாலகுமாரன் அவர்களின் உடையார் படித்து விட்டு தஞ்சை பெரிய கோயிலுக்கு செல்பர்கள் அங்கே சிறிது நேரம் அந்த கோயிலை பார்த்து அழுது விட்டே திரும்புகிறர்கள்..

■ உங்களுடைய எதிர்கால திட்டமென்ன..

● இடிந்திருக்கும் பழைய கோயில்களை, வரலாற்று சின்னங்கள் அனைத்தையும் காப்பாற்ற வேண்டும். இன்னும் நிறைய மக்களுக்கு இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக பள்ளி குழந்தைகளுக்கு சென்றடையவேண்டும்..

■ நீங்கள் வாழ்க்கையில் யாருக்காவது நன்றி சொல்ல வேண்டுமென்றால் யாருக்கு சொல்வீர்கள்..

● நிறைய பேர் இருக்கிறார்கள், குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் என் பெற்றோருக்கும் என் அணுக்கன் படை நண்பர்களுக்கும்தான், அவர்களை இல்லையேல் இது எதுவுமே சாத்தியமில்லை.

■ இன்றைய இளைஞர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி..

● பாரம்பரியம் காப்பதில் இந்த தலைமுறை இளைஞர்கள் ஆர்வமுடன் இருக்கிறார்கள்




அதற்கு சிறந்த உதாரணமே ஜல்லிக்கட்டு போராட்டம், ஜல்லிக்கட்டு தடை என்பது எப்படி ஒரு இன அடையாளத்தின் அழிப்போ அதே போல் கோயில் கல்வெட்டுகளை சிதைப்பது, சிற்பங்கள் சிலைகளை சீரழிப்பது போன்றவையும் இன அடையாள அழிப்பிலேயே சேரும் ஆகையால் இந்த தலை முறை இளைஞர்கள் இவற்றை காப்பற்றி அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்க முன்வரவேண்டும்..

இதுவரை பொறுமையாக தங்கள்



வாழ்க்கை அனுபவங்களை பகிர்ந்தமைக்கு நன்றி திரு. சசிதரன்..

தங்கள் இலட்சியம் நிறைவேற.. நற்பணிகள் சிறக்க.. தமிழ்நெஞ்சம் இதழின் சார்பில் வாழ்த்து கள்..

வாழ்க தமிழ்..
வளர்க எம் மக்கள்..

### நேர்காணல்



**சாரதா க. சந்தோஷ்**
*ஐதராபாத்.*

# தப்ப முடியுமா?

## மலர்மதி



ஜமீல் வாழ்க்கையை வெறுத்தான்.

படித்து, பட்டம் பெற்று என்ன பிரயோஜனம்?

வேலைத் தேடி அலையோ அலை என்று அலைந்தாயிற்று. சரி, வேலைதான் கிடைத்த பாடில்லை, சொந்தமாய் தொழில் ஒன்றைத் தொடங்கலாம் என்றால் அதற்கு யாரும் நிதியுதவி செய்யத் தயாராக இல்லை. வீட்டில் வயதான அம்மா. நோயாளி அப்பா. கல்யாண வயதில் வரிசையாய் மூன்று சகோதரிகள்.

தனக்கு மட்டும் ஒரு நல்ல வேலையோ அல்லது ஓர் உருப்படியானத் தொழிலோ கைகூடினால் எவ்வளவு நன்றாக இருக்கும்? அரசு ஆஸ்பத்திரியில் கால் கடுக்க வரிசையில் நின்று இலவச மருந்துமாத்திரை வாங்கச் சிரமப்படும் வாப்பாவை தனியார் மருத்துவமனையில் ஒரு நல்ல டாக்டரிடம் காண்பித்து சிகிச்சை அளிக்கலாம். மிக்ஸி, கிரைண்டர், வாஷிங் மெஷின் என சாதனங்களை வாங்கிப்போட்டு அம்மாவுக்கு ஓய்வு கொடுக்கலாம். நல்ல, நல்ல மாப்பிள்ளைகளாகப் பார்த்து காலா காலத்தில் சகோதரிகளைக் கரை சேர்க்கலாம்.

மேற்கண்ட அனைத்து கனவுகளும் கனவு களாகவே இருந்துவிட ஜமீலுக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏற்ப்பட்டது சகஜம்தான். ஆனால், அதற்காக அவன் இவ்வளவுப் பெரிய முடிவுக்கு வந்திருக்கக் கூடாதுதான். என்ன செய்வது? மனிதன் சில சமயம் சுயவுணர்வும், சிந்தனா சக்தியும் இழந்து சடுதியில் உணர்ச்சிவசப்பட்டுவிடுகிறான். தான் என்ன காரியம் செய்கிறோம் என்பதையே மறந்து கண்மூடித்தனமாக செயல்பட்டுவிடுகிறான்.

ஜமீலும் ஏறக்குறைய அதே நிலைமைக்குத் தள்ளப்பட்டிருந்தான்.

வாழ்க்கையின் விளிம்பிற்க்கே வந்துவிட்ட உணர்வில் தற்கொலைதான் இந்தப் பிரச்சினைக்கு ஒரே தீர்வு என்கிற ஒரு தப்பான முடிவுக்கு வந்துவிட்டான். தான் இவ்வுலகை விட்டுப் பிரிந்து போவதால் ஏற்படப்போகும் பின் விளைவுகள் பற்றி அவன் சிறிதும் சிந்தித்ததாகவோ, கவலைப்பட்டதாகவோ தெரியவில்லை. கண் மூடித்தனமானச் செயலுக்கு ஏது சிந்தனை? ஏது கவலை?

அன்று இரவு முழுக்கத் தூங்காமல் புரண்டு, புரண்டுப் படுத்துக்கொண்டிருந்தான்.

எப்படி உயிரை மாய்த்துக்கொள்வது என்கிற யோசனையில் அவனுக்கு உறக்கம் வரவில்லை.

விஷம் வாங்கிச் சாப்பிட்டுவிடலாமா?

ரெயில் முன் பாய்ந்துத் தற்கொலைப் பண்ணிக் கொள்ளலாமா?

கிணற்றில் விழுந்துச் சாகலாமா?

எந்த ஒரு யோசனையும் அவனுக்குச் சரியாகப் படவில்லை.

# யோசித்து பாரு

கடவுளுக்குள் ஏது இங்கே
கருத்து வேறுபாடு
காலங்கடந்தும் வாழுபவருக்கு
காண்ப தென்ன வீடு

உலகம் முழுதும் சுழல்பவர்க்கு
உண்டோ இங்கு கூடு
உண்டு உறங்கி தங்கி விட்டால்
உலகம் சுற்றுமா பாரு

அன்பின் வடிவம் கொண்டவர்க்கு
ஆயுதங்கள் ஏது ?
ஆயுத த்தை தூக்கில் கொண்டால்
அனந்த பூமி ஏது ?

அகிலம் காக்கும் கடவுளிங்கே !
அன்னை அப்பனாய் இருக்க
அவரிடத்தில் வேறுபாடு
அருகே வரவே முடியா ?

சிந்தனைகள் அற்ற மனிதன்
சீரழிந்து செத்தான்
சீவி விட்டு பார்த்தவனும்
நாக்கழிவி செத்தான்

உழைப்பின் நம்பி வாழா மனிதன்
உள்ளே பகையை வளர்த்தான்
உணர்வு அற்ற மனிதனையே
உணவாய் மாற்றக் கற்றான்.

சிந்திக்கும் மனிதன் இங்கே
சிறப்பை எய்தி மறைந்தான்
சீரழிந்து வாழ்ந்த மனிதன்
சிரசழிந்து செத்தான்.

நீர் எந்த இடத்தில் என்று
நிமிடம் யோசித்து பாரு
நில்லா உலகம் உனக்கும் கொஞ்சம்
நேரம் கொடுக்குது பாரு.

நெருப்புக் கவிஞர் வீரா
தஞ்சாவூர்.

கடைசியில் கடலில் குதித்து உயிரைவிடத் தீர்மானித்தான்.

அதிகாலை நேரம்.

எப்போது உறங்கினோம் என்றே தெரியாத நிலையில் கண் அயர்ந்திருந்தான்.

“அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்...” கணீர் என்று ஒலித்தது ஃபஜர் தொழுகைக்கான பாங்கு. இறைவன் இல்லத்திற்கு வந்துத் தொழச் சொல்லும் அழைப்பு.

தூக்கம் கலைந்து எழுந்து அமர்ந்தான்.

கூடத்தில் வாப்பாவின் இருமல் சத்தம். அனைவரும் ஆழ்ந்த நித்திரையில்.

நழுவிய கைலியை உதறிக் கட்டிக்கொண்டு பாத் ரூம் நோக்கிப் போனான்.

வேண்டா வெறுப்பாய் ‘உளூ’ செய்துக் கொண்டுத் திரும்பினான்.

சட்டையும், தொப்பியும் எடுத்து மாட்டிக் கொண்டு வாசல் கதவைத்திறந்து தெருவில் இறங்கினான். பள்ளிவாசலை நோக்கி நடந்தான்.

நமாஸ் முடித்து வீடு திரும்பியபோது எல்லோரும் எழுந்துவிட்டிருந்தனர்.

தங்கச்சிகள் தொழுதுக் கொண்டிருக்க, அம்மா திருமறையை ஓதிக்கொண்டிருந்தார். வாப்பா நாற்காலியில் அமர்ந்தவாறே தொழுகையில் ஒன்றிப்போயிருந்தார்.

ஜமீல் செருப்பைக் கழற்றிவிட்டு, கால்களைக் கழுவிக்கொண்டு வந்து கூடத்தில் அமர மூத்த சகோதரி முஷ்தரி தேநீர் போட்டுக்கொண்டு வந்து கொடுத்தாள்.

தொழுது முடித்த மற்ற இரண்டு சகோதரிகளும் தையல் இயந்திரத்தைத் துடைத்து ஆடைத் தைக்கும் ஆயத்தத்தில் இருந்தனர். அந்த ஒரு வருமானம்தானே வயிற்றைக் கழுவ உதவுகிறது?

அவர்களைப் பார்க்க, பார்க்க அடி மனதில் தேங்கியிருந்த ஒருவித 'கையாலாகாத்தனம்' அவனைக் கலங்கடித்தது. இந்த தேநீர் கூட என் சம்பாத்தியத்தில்தானே இருக்கவேண்டும்? சகோதரிகள் வியர்வைச் சிந்திச் சம்பாதிக்கும் பணத்திலிருந்துப் போட்ட தேநீரை அருந்தக்கூட அவன் மனசாட்சி இடந்தராமல் உறுத்தியது.

தேநீரைப் பருகாமல் வைத்தால் காரணம் கேட்பார்கள். சிரமத்துடன் குடித்துவிட்டுக் காலி கோப்பையை அவனே சென்றுக் கழுவி வைத்துவிட்டு வந்தான்.

எங்கு போனாலும் அக்கா முஷ்தரியிடம் மட்டுமே சொல்லிவிட்டுப் போகும் ஜமீல் இன்று வழக்கத்துக்கு விரோதமாக அனைவரிடமும் சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

"இன்னைக்கு ஒரு இன்டர்வியூ அட்டண்டு பண்ணப்போறேன்."

ஒப்புக்கு ஏதோ ஒரு ஃபைலை அவன் எடுத்துக்கொண்டு வெளியேறியபோது யாருக்கும் சந்தேகம் எழவில்லை. மாலை வரைச் சுற்றித் திரிந்தான்.

பகல் உணவு சாப்பிடாததால் பசி வயிற்றைக் கிள்ளியது.

சாகப் போகிறவனுக்கு சாப்பாடு ஒரு கேடா?

பசி மயக்கத்துடனே கடற்கரையை அடைந்தான்.

இருட்டத் தொடங்கியதால் ஆள் நடமாட்டம் குறைய ஆரம்பித்தது.பாதங்கள் புதைய மணலில் நடந்தான்.

"தம்பீ..." குரலைக் கேட்டுத் திரும்பினான்.

யாரோ ஒரு முதியவர்.

"டயம் என்னாச்சு?"

அப்போதுதான் அவனுக்கே நினைவுக்கு வந்தது ஹைதர் அலி காலத்து கைக்கடிகாரம் ஒன்று கையில் கட்டியிருப்பது. பல ஆண்டுகளாக வாப்பா கட்டியிருந்த கடிகாரம் அது. பள்ளிப் படிப்பை முடித்து கல்லூரியில் சேர்ந்த அன்று, "ஜமீல்... இந்தாப்பா, இதை கட்டிக்க. காலேஜுக்குப் போற உனக்கு நேரம் பார்க்க வசதியா இருக்கும்." என்றவாறு ஆசையோடு வாப்பா கட்டிவிட்ட கடிகாரம். அரதப் பழசான வாட்ச்சாக இருந்தா லும் இது நாள் வரையிலும் நேரம் மட்டும் சரியாகக் காட்டிக்கொண்டிருக்கிறது.



ஆனால், அவனுடைய நேரம்தான் இப்போது சரியாக இல்லை.

மணிக்கட்டை உயர்த்திப் பார்த்தவன், "ஆறு பத்து பெரியவரே." என்றான்.

"அப்படியா? ரொம்ப நன்றி தம்பி..."

அப்போதுதான் அவரை கவனித்தான்.

நெற்றியில் திருநீறு, தோளில் துண்டு, கழுத்தில் ருத்ராட்ச மாலை... இந்து பெரியவர் தான். அவர் போய்விட்டார்.

அரவமற்ற ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து அமர்ந்தான்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆள் நடமாட்டம் இருக்கத்தான் செய்தது.

முற்றிலும் குறையட்டுமெனக் காத்திருந்தான். பத்து நிமிடங்கள் கரைந்தன.

பேரிரைச்சலுடன் பொங்கி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த பேரலைகளையே வெறித்துக் கொண்டிருந்தவன் சுற்றும், முற்றும் ஒரு முறை பார்வையைச் சுழற்றி யாருமில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு மெல்ல எழுந்து நின்றான். கடலை நோக்கி நடந்தான்.

அலைகள் அவனை வரவேற்பதுபோல் இருந்தது. எதைப் பற்றியும் சிந்திக்காமல் முன்னேறினான். அலைகள் அவன் பாதங்களை முத்தமிட்டுச் சென்றன. மேலும் முன்னேறினான்.

முழங்கால் வரை கடல் நீர்.

அப்போது ...

ஒரு வலுவான கரம் அவன் தோள் மீது விழுந்து பற்றியது.

திடுக்கிட்டுத் திரும்பினான்.

இந்து பெரியவர்.

சற்று நேரத்துக்கு முன் அவனிடம் நேரம் கேட்ட அதே பெரியவர்.

"என்னை விடுங்கள்... என்னை விடுங்கள்..." எனத் திமிறியவனைத் 'தர, தர'வென இழுத்துக்கொண்டுக் கரைக்கு வந்தார்.

அப்போதும் திமிறிக்கொண்டிருந்தவனின் கன்னத்தில் ஓங்கி 'பளார்' என்று அறைந்தார்.

அவன் கண்களில் பூச்சி பறந்தது.

"நீ தனியா உக்கார்ந்து முழிச்சிக் கிட்டிருந்தப்பவே எனக்குச் சந்தேகம். இது மாதிரி முட்டாள் தனம் செய்வேன்னு. நான் சந்தேகப்பட்டது சரியாப் போச்சு." என்றவர், "உன் பேரென்ன?" என்று கேட்டார்.

"ஜமீல்."

"ஓ... முஸ்லிம் பையனா இருந்துக்கிட்டு இப்படி ஒரு அசிங்கமான காரியத்தைச் செய்யத் துணிஞ்சிட்டியே, உனக்கு வெக்கமா இல்லை?" எகிறினார் பெரியவர்.

ஜமீல் தலை குனிந்து நின்றான்.

"சர், வா.. பாங்கொலி கேக்குது பார். பக்கத்துலதான் பள்ளிவாசல். மனச சாந்தமா வெச்சுக்கிட்டு தொழுதுட்டு வா. நான் வெளியே காத்திருக்கேன்."

பெரியவர் அப்படிச் சொன்னதும் 'சட்'டென அவரை நிமிர்ந்து நோக்கினான்.

"என்ன தம்பி அப்படிப் பார்க்குறே? என்னடாது, முஸ்லிம் தொழுகைப் பத்தி ஒரு இந்துசொல்றாரேன்னா? பகவத் கீதை, குரான், பைபிள் மூன்றையும் நான் படிச்சிருக்கேன். எல்லா மதங்களையும் தெர்ஞ்சுவெச்சிருக்கேன். எந்த மதமும் தீய வழியைச் சொல்லிக் கொடுப்பதில்லை. அவரவர் தத்தம் மதங்களை ஒழுங்கா கடைப் பிடிச்சாலே போதும். எந்த வித சண்டை, சச்சரவு இல்லாம நிம்மதியா வாழலாம்." என்றவர், "சரி,சரி... தொழுகைக்கு நேரமாகுது." என சொல்லிவிட்டு அவர் நடக்க, அவருடன் நடந்தான்.

மக்ரிப் தொழுகை முடியும் வரை பள்ளி வாசல் படிகட்டில் அமர்ந்து ஜமீலுக்காகக் காத்திருந்தார் பெரியவர்.

'என்ன நடக்கிறது' என்பதே புரியாமல் குழப்பத்தின் உச்சியில் இருந்தான் ஜமீல்.

ஏதோ ஒரு குற்ற உணர்வு அவன் மனதில் எழுந்து அவனை வதைத்தது.

தொழுது முடித்து எழுந்தான்.

பெரியவரை நோக்கிப் போனான்.

அவர் அருகில் அமர்ந்தான்.

"ஜமீல்... பார்த்தால் படிச்சவன் மாதிரி தெரியுறே. இந்த மாதிரி முடிவு எடுக்கக் காரணம் என்ன?"

சிறிது நேர அமைதிக்குப் பிறகு ஜமீல் தன்னைப் பற்றியும், தன் குடும்பத்தைப் பற்றியும் சொன்னான்.

எல்லாவற்றையும் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்த பெரியவர், "தற்கொலை செய்வது பாவம் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

ஜமீல் பதில் சொல்லவில்லை.

"நீ இறந்துபோன பிறகு உன் குடும்பத்தின் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்துவிடுமா?

உன்னை இந்த உலகத்துக்கு அனுப்பி வைத்தவன் அந்த அல்லாதானே? உன்னை மீண்டும் எப்போது அழைத்துக் கொள்ள வேண்டுமோ அப்போது அவனே அழைத்துக் கொள்வான். அவன் அழைப்பு வருவதற்கு முன் நீயாகவே உன் உயிரை மாய்த்துக்கொள்ள உனக்கு எந்த உரிமையும் இல்லை. புரிந்ததா?"

"வறுமையும், மன உளைச்சலையும் கொடுத்து வேடிக்கைப் பார்க்கும் அந்த அல்லாஹ்விட மிருந்துத் தப்பிக்கத்தான் நான் இந்த முடிவுக்கு வந்தேன்."

> "வழிவழி வந்து நம்மை
> வளமாக்கும் கவிதை வாழ
> விழிவிழி கவிதை என்னும்
> விளக்கேற்று நெஞ்ச வீட்டில்"
> \- ஆசிரியர்

"அடப் பாவிப் பயலே... உன் கான்செப்ட்டே தப்பா இருக்கே? எல்லா ஜீவராசிகளைப் படைத்த அந்த எல்லாம் வல்ல அல்லாவா உன்னை இப்படி ஒரு இக்கட்டான நிலையில் வைத்து வேடிக்கைப் பார்ப்பான்? இல்லவே இல்லை."

"அப்படியானால் என்னை ஏன் இப்படி அலையவைக்கிறான்?"

"எல்லோரையும் எல்லா சுகங்களையும் கொடுத்து ஒரே மாதிரி வைத்தால் எப்படி இந்த உலகத்தைச் சமன் படுத்தமுடியும்? ஏற்றத் தாழ்வுகள் இருக்கவேண்டாமா? தவிர, எதை, எப்படி, எங்கே வைக்க வேண்டும் என்பதை அவன் நன்கு அறிந்துவைத்தவனாக இருக்கின்றான். உன்னை அலையவைப்பதில் அவனுக்கென்ன லாபம்? சில பேரை இந்த நிலைமையில் அவன் வைப்பதே அவர்களைச் சோதிப்பதற்க்காகத் தான். எத்தனையோ தேர்வுகளை எழுதி பாஸ் ஆன நீ, அவன் வைக்கிற பரீட்சையில் தோற்றுப் போகலாமா?

அவன் மீது வைத்த நம்பிக்கையை இவ்வளவுச் சுலபத்தில் இழந்துவிடலாமா? அதுமட்டுமில்லை. அவனிடமிருந்துத் தப்பிக்கத்தான் நீ தற்கொலை செய்யப் போனதாகச் சொன்னாய். ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள். அவனிடமிருந்து யாராலும் தப்பிக்கவே முடியாது. இறந்த பிறகும் அவனிடம்தானே போகவேண்டும்?

உங்கள் இஸ்லாம் மதத்தில் இம்மை, மறுமைன்னு இருக்கு. மறுமையில் உங்களுக்கு பலத்த நம்பிக்கையும் இருக்கு. அப்படி இருக்க, மறுமையில் அல்லா கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லித்தானே ஆக வேண்டும்? இதோ பார், இந்த உலகத்தில் யாருக்குத்தான் பிரச்சினை இல்லை? எல்லோருக்கும் உண்டு.

பிரச்சினைகள்தான் வாழ்க்கை. அதை எதிர்கொண்டு, சமாளித்து முன்னேறுபவனே புத்திசாலி. அதைக் கண்டு அஞ்சி ஓடுபவன் கோழை. எப்பேர்ப் பட்டப் பிரச்சினையானாலும் அதை அல்லாவிடம் முறையிட்டு மன்றாடி வந்தால் இன்ஷா அல்லா நிச்சயம் பலன் கிடைக்கும். என்ன, சில பேருடைய வேண்டுதல் சீக்கிரத்தில் நிறை வேறும் சில பேருக்கு சமயம் எடுக்கும். இதிலும் ஏதாவது அர்த்தம் ஒளிந்திருக்கும். எல்லாம் அவனுக்கே வெளிச்சம். எந்தக் காரணத்தைக் கொண்டும் நாம் அவன் மீது வைத்திருக்கும் நம்பிக்கையைச் சற்றும் தளர விடக் கூடாது.”


பெரியவர் சொன்ன அந்த அப்பட்டமான உண்மைகள் உறைக்க தொடங்கின.

ஆழ்ந்து சிந்தித்த ஜமீல், “ஐயா... என்னை மன்னிச்சிருங்க. ஏதோ கண்மூடித்தனமானக் காரியத்தைச் செய்ய இருந்தேன். சரியான சமயத்தில் வந்து என்னைக் காப்பாற்றியதோடு இல்லாமல் என் அறிவுக் கண்ணையும் திறந்து விட்டுட்டீங்க. ரொம்ப நன்றி...” என நெகிழ்ந்து அவர் கரங்களைப் பற்றிக்கொண்டான்.

“நான் சொன்னதைப் புரிந்துக்கொண்டாயே அதுவே போதும்.” என்றவர், “போன வாரம் பீட்டரைக் காப்பாற்றினேன். முந்தா நாள் முருகேசனைக் கரைச் சேர்த்தேன். இன்று நீ. நாளை யாரோ..?” என்று சொல்லிக்கொண்டே துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு எழுந்தார் அந்தப் பெரியவர்.

## இரவு..!

என் படுக்கையறையில்
ஒரு சுரங்கப்பாதையிருக்கிறது.
தினம் நான் தூங்கியபின் பயணிக்கும் அப்பாதை
எங்கே தொடங்குதென்பது தெரியவில்லை.
அருகிலிருக்கும் துணை, இணை எல்லாம் மறந்து
நிஜவாழ்வில் நான் தவறவிட்ட இன்பங்களைப்
பின்னோக்கி நடந்து பெற்றுக்கொள்கிறேன்.
நேரமாகுதே எனும் எண்ணம் துளியும்
இல்லாதிருக்கும் வகையில் அங்கிருக்கும்
கடிகாரங்கள் கழட்டிவைக்கப்பட்டிருக்கிறது.
துயிலதனின் ஓரமர்வில் நிறுத்தப்படும் நிகழ்வு,
அடுத்தநாளிரவில் அங்கிருந்தே ரெஸ்யூம் ஆவதால்
காட்சித்தொடர்ச்சிப் பிரச்சினையே இல்லை.
ஆச்சரியப்படுத்தும் வகையில் யாருமே
ஆதார் அட்டையும் கேட்பதில்லை.
துயர்தரும் வாழ்வியல் நொடிகள்
என்கழுத்தை நெறிக்கும்போதெலாம்
அன்றிரவு வரவிருக்கும் சுரங்கப்பாதை நிமிடங்களை எண்ணி
சுகித்துக்கொள்கிறேன்.
எனினும்...
இன்றிரவு ஏகாதசியாம் என்ன செய்யப்போகிறேன்?



**மு.பாஸ்கரன்**
வில்லியனூர், புதுச்சேரி

# தேயிலைப் பா (பூ) க்கள் !

‘மலையகம்’ இலங்கையின் தேயிலைத் தோட்டங்களின் சிறப்பிடம். உலகம் முழுவதிலும் தரம் வாய்ந்த தேயிலையை உற்பத்தி செய்கின்ற இவர்களின் வாழ்வுநிலை இன்றளவும் பின்தங்கியே இருக்கின்றது. மலை உயரங்களில் இவர்கள் வாழ்ந்தாலும், உயரவே இல்லை இவர்களின் வாழ்வு. விளிம்பு நிலை மக்களின் வாழ்வாக இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் கடந்துப் போகுமோ என்பதும் தெரியவில்லை.

« அந்த மலைகளிலிருந்து
பாய்ந்து வருவது
பால் அருவிகள் அல்ல
மலையக மக்களின்
கண்ணீர்க் குளங்கள் ! » (பக் – 78)

நிமிர்ந்து நிற்கும் தேயிலை செடிகளின் கொளுந்துகளைப் பறிக்கத் தெரிந்தவர்களுக்கு, வாழ்வில் நிமிர்ந்து நிற்கத் தெரியவில்லை. கல்வியறிவு அற்றவர்களாகவே பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருவதால், இவர்களின் கூலி குறைவாகவே வழங்கப்படுகின்றது. ஆளும் வர்க்கத்தின் சவாரிக் குதிரைகளாகவே எங்கள் வாழ்வு மாறிப்போனது என்கிறார் கவிஞர் ராம்ஜி உலகநாதன்.

« குனிந்து போவோம்
அல்லது
பனிந்து போவோம் !
என்றுமே எங்களுக்கு
நிமிர்ந்து நின்று
பழக்கமில்லை ! »

வறுமைதரும் வாழ்வியல் துன்பங்களை மட்டுமல்ல காதல், அழகியல் சார்ந்தும் கவிதைகள் பேசப்பட்டு இருப்பது மலைபூமி இயற்கை அன்னையின் அழகியப் படைப்பு. எனவேதான் காட்சிகளால் கவிதையாக்குகின்ற திறன் படைத்திருக்கிறார் கவிஞர்.




« தேயிலைச் செடிகூட
வீணையாகும்
அவளின் விரல்கள் அதில்
விளையாடும் போது... (பக் – 82)

மலையக மக்களின் ஆற்றாமையையும், மலையின் அழகியலையும் தனது கவிதைகளுக்குள் உரம் இட்டு இருக்கிறார். மலையக மக்களின் துயரங்கள் நிறைந்த வாழ்வு... இன்னும் ஆழமான வரிகளால் வளம்பெற வேண்டும். இது வெறும் கவிதைகள் நிறைந்த தொகுப்பில்லை. கண்ணீர் நிறைந்த மலையகமக்களின் வாழ்வியல் முறை. இக்கவிதைத் தொகுப்பைத்தந்த கவிஞர் ராம்ஜி உலகநாதன் அவர்களுக்கு வாழ்த்துகள். இன்னும் நிறைய எழுதி புகழ்பெற வேண்டும். நூல்கள் வெளியிட வேண்டுமென போற்றி மனதாரப் பாராட்டுகின்றோம்!

தேயிலைப் புஷ்பங்கள்
ஆசிரியர்: ராம்ஜி உலகநாதன்
முதர்பதிப்பு: ஆகஸ்ட் 2018
பக்கங்கள்: 90, அளவு : 148x210

வெளியீடு:
தடாகம் கலை இலக்கிய வட்டம்,
கொழும்பு, இலங்கை.

தொடர்புகளுக்கு:
0776264891 / 0767473723




## முனைவர் நா.சங்கரராமன்

தமிழ்த்துறை

எஸ். எஸ். எம். கலை அறிவியல் கல்லூரி

குமாரபாளையம் நாமக்கல் மாவட்டம்


# மனம் எனும் குழந்தை

**நீங்கள் எதுவாக விரும்புகிறீர்களோ அதுவாகவே மாறலாம்**

***மனம் அடக்கப்பட வேண்டியதில்லை ஆளப்பட வேண்டியதே...***

சதா பாரதி

ஆயிரம் கணினிகளைவிட வேகமானது மனதி மனம் என்றால் அது மிகையாகாது. எண்ணற்ற நினைவுகளைச் சுமந்து கொண்டு எண்ணிலடங்கா இடங்களை அரை நிமிடத்திற்குள் சுற்றி வரும் வலிமை படைத்தது. காலம் காலமாக நம்மிடையே புலனடக்கம் பற்றி பேசி வருகிறோம். அளவிற்கு அதிகமாக ஆசைப்படக்கூடாது என்பதுபோன்ற வசனங்கள் உச்சரிக்கப்பட்டு வருவதால் நாம் ஒரு பெரிய முயற்சியைச் செய்வதுகூட அளவு கடந்த ஆசை என்பது போல அதைக் கைவிட்டுவிடுகிறோம். ஆனால், இந்த உலகமே உனக்கானது என்பதை உணரும்போதுதான் நமக்கான வலிமையும் நமது ஆற்றலும் தொடீயவரும். நமது மனம் நாம் சொல்வதை அப்படியே ஏற்றுக்கொண்டு செயலாற்றும் குழந்தை போன்றதுதான். ஆதனிடம் நாம் எவ்வாறு சொல்லி வைக்கிறோமோ அவ்வாறுதான் அது நடந்து கொள்ளும். நம்முடைய சிறிய வயதில் நமக்குள் நுழைந்துவிட்ட மொழியும், பழக்க வழக்கங்களும் நம்முடைய இறப்பு வரை எப்படி தொடர்ந்து வருகிறதோ, அது போலவே நம்முடைய மனதிற்கு நாம் கட்டளையிடும் செயல்களை அது உடனடியாக செய்துகாட்டும்.

அடிக்கடி நாம் அனைவரும் கேட்ட வாசஙகங்களே இவை. சுவாமி விவேகானந்தர் கூறியவை இந்த வாசகங்கள். ஆனால் மிகவும் வலிமைமிக்க வாசகங்கள். நம்முடைய மனம் நினைப்பதை அடைந்துவிடும் என்பதை பலருக்கும் உணர்த்தும் அற்புத வாசகம். சற்றே உங்களை பின்னோக்கி யோசித்துப் பாருங்கள். இப்போது நீங்கள் இருக்கும் இந்த நிலைமைக்கு யார் காரணமாக இருந்திருக்கிறார்கள். நீங்கள் பட்ட அவமானமோ அல்லது உங்களுக்கு கிடைத்த பாராட்டோ கூட காரணமாக இருக்கலாம். பாராட்டைவிட அவமானங்கள் கூடுதலாக உங்களை உந்தித் தள்ளியிருக்கும். எல்லாம் இழந்துநிற்கிறோம் எனும்போது உங்களுள் நிலைபெற்ற சுயமரியாதையும் தன்னம்பிக்கையும் உங்களை அடுத்த நிலைநோக்கி அழைத்துச் சென்றிருக்கும். அந்த நிலையில் நீங்கள் செயலாற்றிய திறனும் வேகமும் உங்களையே உங்களுக்கு அறிமுகம் செய்திருக்கும். ஆனால் அதே வேகத்தோடும் முயற்சியோடும் இப்போதும் செயலாற்றுகிறோமா என்றால் நிச்சயமாக இல்லை என்ற பதிலே பலருக்கும் வரும். என்ன காரணம். சற்றே யொசித்துப் பாருங்கள். பெரிய விஷயம் ஏதுமில்லை. ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னரும் சிறிய இளைப்பாறுதல் அனைவருக்கும் தேவைப்படுகிறது. ஆனால் அது பல நேரங்களில் சோம்பேறித்தனமாகவும் மாறி விடுகிறது. நமது முன்னேற்றத்திற்கும்

வளர்ச்சிக்கும் மிகப்பெரிய முட்டுக்கட்டையாக இருப்பது சோம்பேறித்தனமே ஆகும். முதலில் மனதில் இருந்து நாம் அகற்ற வேண்டியது சோம்பலைத்தான்.

### எமக்குத் தொழில் கவிதை
### நாட்டிற்கு உழைத்தல்
### இமைப்பொழுதும் சோராதிருத்தல்

என்பான் பாரதி. கண் இமைக்கும் பொழுதுகூட நாம் சோம்பியிருக்க கூடாது என்பதே அவனுடைய கொள்கையாக இருந்தது. சிலருடைய முகமும் அகமும் நம்மையறியாமலே நமக்குள் ஊடுருவி நம்மையும் அவர்களைப் போலவே இயங்கச் செய்துவிடும். பாரதியும் அப்படிப்பட்ட வகைதான். நீங்கள் ஒன்றாம் வகுப்பில் அமர்ந்திருந்த போது நீங்கள் எதுவாக ஆகப்போகிறீர்கள்? என்ற கேள்விக்கு அதிக விபரம் இல்லாமல் பதில் அளித்திருப்பீர்கள். சற்றே விபரம் அறிந்தபின் ஆறாம் வகுப்பில் அதே கேள்விக்கு வேறு பதில் அளித்திருப்பீர்கள். நானும் அப்படித்தான். கல்லூரி அளவில் வந்தபின் நீங்கள் வேறொரு பதில் வைத்திருப்பீர்கள். இப்போது நீங்கள் வழங்கிய பதிலுக்கு சிறிதும் சம்பந்தமில்லாத ஏதோ ஒரு இடத்திலே அமர்ந்திருப்போம். ஆனால் நாம் நினைவுகளை அசை போட்டபடியே அமர்ந்திருப்போம் சிலருக்கு வாய்ப்பு நன்றாக கிடைத்திருந்தும் நம்மால் முடியுமா என்ற எண்ணத்தால் அதை தவறவிட்டிருப்போம். இன்னும் சிலரோ இதுவே போதுமானதாக இருக்கிறது. இந்த வாழ்க்கை பிரச்சினையில்லாமல் இப்படியே போனால் போதும் என்றபடியே கடந்து சென்றிருப்போம். வாழ்க்கையை நாளும் பொழுதுமாக கடத்திக்கொண்டிருப்போம்.

### “மனசுல நினைக்கிறதெல்லாம் நடக்குமா?”

எல்லோரிடமும் தொக்கி நிற்கும் கேள்வி இது. சில நேரங்களில் நாம் நினைத்த நல்ல விஷயங்கள் நடந்தேறும் போது நம்மைச் சுற்றி நேர்மறை எண்ணங்களும், நடைபெறாத போது ஏதாவது ஒரு சமாதானமும், காரணமும் நம்மைச் சுற்றி நிற்கின்றன. கடைசி வரை முயற்சி இல்லாமல் தனக்கு எதுவுமே நடக்காது என்று நொந்து கொள்பவர்களே இங்கு அதிகம் எனலாம். தினசரி செய்தித்தாள் போட்டுக் கொண்டிருக்கும்போதே இந்த நாட்டின் உயர்ந்த பதவியில் அமர்வோம் நம்முடைய செய்திகளையும் இந்த தாள்கள் தாங்கி நிற்கும் என்று மனதாலே நினைத்து கனவு கண்டு வெற்றி பெற்றவராக வலம் வந்தவர்தான் நமது இளைஞர்களின் எழுச்சி நாயகன் டாக்டர் அப்துல்கலாம் அவர்கள். அவர்கள் ஒருமுறை வடநாட்டிலே ஒரு பள்ளியில் பேசும்போது “நீங்கள் என்னவாக வேண்டும்?” என்ற கேள்வி எழுப்பியபோது ஒரு சிறுவன் “நான் இந்த நாட்டின் குடியரசுத் தலைவராக வர வேண்டும் என்று விரும்புகிறேன்” என்றானாம். அதற்கு அந்த சூழ்நிலையில் கலாம் அவர்கள் “வாழ்த்துக்கள்'' என்று சொல்லிவிட்டு அவரைத் தனியே அழைத்து “உங்கள் முயற்சிக்கும் நம்பிக்கைக்கும் வாழ்த்துக்கள். ஆனால் உங்களுக்கு இரண்டு கண்களும் பிறவியிலிருந்தே தெரியாது. நீங்கள் ஒரு மாற்றுத்திறனாளியாக உள்ளீர்கள். இந்த நிலையிலும் இது சாத்தியம் என்று நினைக்கிறீர்களா?” என்ற கேள்விக்கு ”நிச்சயமாக என்னால் முடியும். இதுவரை என்னைப்போன்ற யாரும் அந்த பதவியில் அமரவில்லை என்றால் அதில் அமரும் முதலாவது மனிதராக நான் இருப்பேன். அதற்கு உங்கள் ஆசிகள் வேண்டும் என்றபோது கலாம் அவர்கள் அந்த சிறுவனை உச்சி முகர்ந்தார் என்ற செய்தியைப் படித்துள்ளேன். அதன்பின்னரும் தொடர்ச்சியாக பல சமயங்களில் அந்த சிறுவன் அவர் இறக்கும்வரையிலும் விடாமல் மின்னஞ்சலில் தொடர்பில் இருந்து தன்னுடைய படிப்பு, சாதனைகளை அவரோடு பகிர்ந்து வந்துள்ளான். மனம் எத்தகைய வலிமை படைத்தது என்பதை சற்றே சிந்தித்துப் பாருங்கள். இங்கே பலருக்கு மன ஊனம் என்பதே அதிகம் உள்ளது. எவ்வித முயற்சியும் இல்லாமல் உழைப்பும் இல்லாமல் உடனடியாக ஒரு உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்ற பேராசை உண்டு. சில நேரங்களில் தகுதியே இல்லாத பலரும் அந்த நிலைக்கும் செல்வதும் உண்டு. ஆனால்

பழைய ஓவியம்
மேலும் மெருகூட்ட
திரையில் கிழிசல்.

- பானால். சாயிராம்.

நிச்சயமாக அவர்களால் அந்த நிலையில் நீடிக்க இயலாது. ஆகவே மனதிலே நீங்கள் நினைப்பது நடக்க வேண்டும் என்றால் அதற்கான முயற்சிகளையும் உழைப்பையும் தயங்காமல் வழங்குதல் வேண்டும்.

**மனதில் உறுதி வேண்டும்**
**வாக்கினிலே இனிமை வேண்டும்**
**நினைவு நல்லது வேண்டும்**
**நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்**
**கனவு மெய்ப்பட வேண்டும்**
**கைவசமாவது விரைவில் வேண்டும்**

இந்த பாரதியின் வரிகளைப் பாருங்கள். ஒவ்வொருவருக்குள்ளும் ஓராயிரம் அர்த்தங்களையும் உற்சாகத்தையும் புதைத்து வைத்திருக்கும் அற்புதமான கவிதை. மனதில் உறுதி இருந்தால்தான் நாம் செய்யும் செயல்களில் நேர்த்தி மிளிரும். ஒரு தலைவனுக்கு மன உறுதி மிக அவசியமான ஒன்றாகும். அலெக்சாண்டருக்கும், மாவீரன் நெப்போலியனுக்கும் இருந்த அதே உறுதி பாரதிக்கும் இருந்தது. இந்த உலகை மாற்ற வந்தவன் தான் என்ற ஞானச்செருக்கு இருந்தது. காணும் பொருள் அனைத்தையுமே கடவுளின் வடிவமாக கண்டவன். மன உறுதியோடு அவன் சொல்லும் சொற்கள் அனைத்தும் வேதமாகவே திகழ்ந்தன என்பதை யாராலும் மறுக்க முடியாது. துலைவனாக இருப்பவன் தான் மட்டுமே சரியாக இருக்க வேண்டும் என்று நினைத்தால் போதாது. தனக்கு கீழே இருப்பவர்கள் அனைவரும் மன நிம்மதியோடும் மகிழ்ச்சியோடும் இருக்க வேண்டும் என்றே விரும்ப வேண்டும். அந்த மகிழ்ச்சி அவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்றால் நம்மிடைய சொற்களில் வலிமை இருந்தால் மட்டும் போதாது. இனிமையும் சேர்ந்திருக்கவேண்டும். நன்மைவிளைவிக்கும் சொற்களை நமது மனதிலிருந்து சொல்ல ஆரம்பித்தால்தான் நம்முடைய செயல்கள் அனைத்தும் இலக்கினை நோக்கி சிறப்பாக நகர ஆரம்பிக்கும். ஒவ்வொரு வரிகளை மட்டுமின்றி தனது வாழ்க்கையையும் அடுத்தவருக்கு ஒரு பாடமாக நினைத்து வாழ்ந்துகாட்டியவனே மகாகவி.

**உங்களால் செய்யமுடியாது**
**என்பதை கடவுள் ஒருபோதும்**
**உங்களிடம் ஒப்படைப்பதில்லை..**
**செயல்படுங்கள்.**

சதா பாரதி

நீங்கள் கடவுள் நம்பிக்கை உடையவராக இருந்தாலும் சரி. அல்லது இயற்கையை நேசிப்பவராக இருந்தாலும் சரி. நமக்குள் இருக்கும் நல்ல நம்பிக்கையே நம்மை வழிநடத்தும் என்பதை பலநேரங்களில் நானே உணர்வுப்பூர்வமாக உணர்ந்து கொண்டவன். உங்களுக்கு ஏதோ ஒரு வாய்ப்போ ஒரு வேலையோ வருகிறது என்றால் உடனடியாக அதை மறுத்துவிடாதீர்கள். அது உங்கள் தலைமைப்பண்பை நிர்ணயிக்கும் வாய்ப்பாக எடுத்துக் கொள்ளுங்கள். இரண்டு காரணங்களுக்காக அந்த வாய்ப்பு உங்களைத் தேடி வந்திருக்கும். ஒன்று உங்களால் செய்ய முடியும் என்பதற்காகவே அது பலரையும் தாண்டி உங்களிடம் வந்து சேர்ந்திருக்கும். இது நமக்கான நேர்மறைக்கு கிடைத்த பரிசாக கிடைக்கலாம். சில நேரங்களில் நம்மைச் சிக்கலில் மாட்டிவிடவேண்டும் என்பதற்காக இதுபோன்ற விஷயங்களை நம்மிடம் தள்ளி விடலாம். நாமும் அந்த வேலையை ஒரு சிக்கலாக கருதி தொடங்கினோம் என்றால் அது அப்படியே நின்றுவிடும். ஆனால் அது நம்மை, நம்முடைய ஆளுமையை பிறருக்கு நிரூபிக்க கிடைத்த வாய்ப்பாக பயன்படுத்தும்போதுதான் நம்முடைய தனித்தன்மை சிறந்த முறையில் வெளிப்பட ஆரம்பிக்கும். இன்றைய சூழலில் பல்வேறு துறைகளில் மிக உச்சத்தில்

இருப்பவர்கள் அனைவருமே ஏதோ ஒரு வகையில் ஆரம்பத்தில் இந்த சிக்கல்களை எல்லாம் கடந்து வந்தவர்களே. அவர்கள் அனைவருமே தனக்கு கொடுக்கப்பட்ட வேலைகளைசிக்கலாககருதாமல்வெற்றிகரமாக செய்துமுடித்தவர்கள் என்பதை நாம் உணர வேண்டும். உங்கள் மனதிலே நல்லவற்றை நினையுங்கள். நம்பிக்கையால் நிரப்புங்கள். இந்த உலகமே உங்களுக்காக காத்திருக்கிறது என்பதை நம்புங்கள். இயன்றவரை வேகமாக சரியான இலக்கு நோக்கி செயலாற்றுங்கள். உங்கள் மனம் உங்களைத் தொடர்ந்து வரும் நாய்க்குட்டி போலவே வரும். அவ்வப்போது அதற்கு நல்ல சிந்தனைகளை உரமாகவும் உணவாகவும் இடுங்கள். உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்.

**“இன்னும் நான்கு ஆண்டுகளுக்குள் நான் ஒரு தமிழ்ப்பேராசிரியராக வருவேன்”**

நான் எனது இளம் அறிவியல் பட்ட பிரிவுபச்சார விழாவிலே பேசியபோது அனைவருக்கும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. அதில் சிலர் ஏளனம் செய்யத்தான் செய்தார்கள். அதன்பின்னா சரியாக 4 ஆண்டுகள் கழித்து என்னுடைய முதுகலை, இளமுனைவர் பட்டத்தைதமிழிலேமுடித்துதமிழ்ப்பேராசிரியராக வந்து நின்றபோது அனைவரும் வாயடைத்துப் போனார்கள். அதன்பிறகு 14 ஆண்டுகள் கடந்து மாணவர்கள் விரும்பும் ஆசிரியராக வந்துநிற்பதுதான் என்வாழ்நாள் சாதனையாக கருதுகிறேன். உங்களுக்குள்ளும் ஒரு தலைவன் மறைந்திருப்பான். ஆவனை வெளிக்கொண்டு வாருங்கள்.

**மனம் விரும்பியதைச் செய்யுங்கள்**
**மாநிலமும் உங்களை விரும்பும்**

சதா பாரதி

# ஒளி விழா



**ஒளி காட்டும் தீபங்களின் அணிவரிசையில்**
**வலி மூட்டும் பாபங்கள் அகலட்டும்.**
**மத்தாப்பு மகிழ்ச்சியாலும் புத்தாடை நெகிழ்ச்சியாலும்**
**வித்தாக விளையும் புத்தாக்கம் மலரட்டும்.**
**இனிப்புகளின் களிப்புகளும் இதயங்களின் சிலிர்ப்புகளும்**
**திணித்து நின்ற மனக்கசப்புகளை விரட்டட்டும்.**
**நானென்ற அகந்தையும் எனதென்ற கர்வமும்**
**நாமென்ற மனதால் இலதென்று உருவட்டும்.**

**விட்டாலும் விடாத வீணான எண்ணங்கள்**
**பட்டாசு விட்ட புகையென விலகட்டும்.**
**ஆறாத ரணங்களும் ஆகாத குணங்களும்**
**மாறாத திளைப்பால் வேரோடு களையட்டும்.**
**இழந்த இன்பங்களும் பிளந்த சொந்தங்களும்**
**கலந்த வண்ணங்களாய் கண்களில் ஒளிரட்டும்.**
**பெரியோரின் ஆசியும் சிறியோரின் குதூகலமும்**
**உரியோரின் உள்ளத்தை உணர்வோடு இணைக்கட்டும்.**



**– பா.சக்திவேல்**

# மேளச்சத்தம்




ம.சக்திவேலாயுதம்
நெல்லை


இதுவரை நான் பார்த்த 100க்கும் மேற்பட்டோரில் ஒருவரை கூட நான் கழித்ததுகிடையாது.ஆனால்அந்த100க்கும் மேற்பட்டோரால் கழிக்கப்பட்டேன் என்பது மட்டுமே உண்மை. அப்படி என்னிடம் என்ன குறை என்பதை அடிக்கடி பலநேரங்களில் சுயபரிசோதனை செய்து பார்த்தும் கூட அந்தக்குறையை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒருவேளைநான், நீதி, நேர்மை, நியாயம், என எல்லாம் கூடி ஒரு சேர.வாழ்ந்துவருவது கூட குறையாக இருக்குமோ? இல்லை மது, மாது, புகை சண்டை என எல்லாம் ஒரு சேரவோ அல்லது அதில் ஒன்றாவது என்னிடம் சேர்ந்து வாழாமல் இருப்பது தான் என் குறையோ? எனக்குள் என்னை பற்றிய கேள்விகள்... இதை யாரிடம் தான் நான் கொட்டித்தீர்ப்பது...

“சரி உங்ககிட்ட கொஞ்சம் கொட்டுறேன்”

நேற்றும் அப்படித்தான்... பெண் பார்க்கும் படலத்தில் பல வித்தைகளை கற்ற அனுபவசாலிகளான எம் பெற்றோர்,

“இந்த பொண்ணாவது அமையணும்டே உனக்கு” என அம்மா எனைப்பார்க்க

எனக்கு மனதில் உள்வலி இருந்தாலும் கூட “அமையும்மா” காத்திருப்போம் எனச் சொல்லிவிட்டு,

“எனக்கு 35 தானம்மா ஆகுது, அந்த சமூகத்தில் இத விட வயசான பிறகு

மனைவி: உலகம் பூரா போய் தேடினாலும் என்ன மாதிரி மனைவி கிடைக்கமாட்டா...

கணவன்: என்க்கென்ன பைத்தியமாடி புடிச்சிருக்கு... மறுபடியும் உன்னை மாதிரியே தேட...!



தாம்மா கல்யாணம் காட்சி எல்லாம்” என என் அம்மாவிற்கும் என் மனதிற்கும் ஆறுதல் சொல்லிக்கொண்டேன்.

“சரிப்பா.. இப்போ பார்க்க போகிற பொண்ணாவது அமையணும்,சாமி கும்பிட்டுட்டு திருநாரு பூசிட்டு வா” என்றார் அம்மா.

“ஒருவேளை இப்படியா இருக்குமோம்மா முந்திலாம் சீர்வரிசைகள், கல்யாணம், நகை நட்டு, இப்படி எல்லாம் பையன் வீட்டில கேட்டு வாங்குனதால, இப்போ அதே காலம் பொண்ணு வீட்ல கேட்டு வாங்குற காலமா மாறியிருக்குமோ?”

“அடப்போடா நீ வேற... முதல்ல இந்த பொண்ண பார்ப்போம்.. “நம்ம ஆட்டோக்காரரை கூப்பிடு” எனச்சொல்லிட்டே

“என்னங்க சீக்கிரம் கிளம்புங்க நேராயிட்டு” என் அப்பாவை உசுப்பிவிட்டார் அம்மா. வழக்கம் போல் பெண்பார்க்கும் படலமாக அது எனக்குத்தெரிந்தது.

நானும் ஆட்டோக்காரரை அழைக்க, “இதோ ஐஞ்சே நிமிசம் தம்பி வந்திடுறேன்” என்றார்.

நாங்க மூவரும் டிப்டாப்பா கிளம்பி ஆட்டோக்காக வெயிட்டிங். ஆட்டோ சிறிது நேரத்தில் வந்தது.மூவரும் ஏறினோம்.

ஆட்டோ டிரைவர் எங்கம்மாவை நோக்கி “எங்கம்மா போகணும்” என்பதைப் போலவே பார்த்தார். ஆனால் கேட்கவில்லை.

ஆட்டோ டிரைவரை பார்த்து “தம்பி புது பஸ் ஸடாண்ட் கிட்ட இருக்கும் பெருமாள்புரம் போ” என வாய்மொழிந்தார் அம்மா. ஆட்டோ கிளம்பியது.

“எனக்கானா ஒரே நெர்வஸ், நட்சத்திரம் ஓகே, ஜாதகம் ஓகே, நம்ம பயோடேட்டா ஓகே, போட்டோ ஓகே, இப்படி எல்லாம் பிடிச்ச பிறகு தான் நம்மள வரச்சொல்லிருக்காங்க, அதனால எப்புடியும்

# எது போய் எது?

என் சந்தோஷங்கள்
கழிக்கப் படுகின்றன;
எனவே என்
துக்கம் கூடுகிறது.
அனுபவிக்கும் துன்பம்
கழிவு படுமெனில்
ஆனந்தம் சேருமா?
சரி கட்டும் கணக்கா இது?
நற் காரியம், சுகம் தரும்
புண்ணியமாம்!

வரவு வைக்கிற கணக்கன் யார்?
நம்பிக்கை நோகிறதே,
நடப்பன கண்டால்!
மனம் அழைக்கும் வேகத்தில்,
எந்த தராசு காட்டும்
சரியான நிறையை?
வாழ்நாள் ஆயிரமாயிரம்;
துன்ப, இன்பம்
யாம் அறியா கணக்கீடு ..
விரலிடுக்கு நீராய்
வழிந்தோடும் வாழ்நாள்
அதுவுமே
நாம் உணரா கணக்குதான்.

உஷாதேவி
சென்னை - 24.

நம்மள புடிச்சிரும்" என்றபடி என் ஆழ்மனதில் கொஞ்சம் நம்பிக்கை ஒட்டியிருந்தது.இப்படி நான் நினைத்துக்கொண்டிருக்க

"நம்ம இந்த ஜாதகம் பார்த்தோமா" என் அப்பா என் அம்மாவிடம் கேட்க,

"பார்த்தா மட்டும் எல்லாம் சரியாவா நடக்கு, அதான் அவங்க ஜாதகம் எல்லாம் பார்த்திட்டு தானே கூப்பிட்டிருப்பாங்க" என அம்மா சொன்னதும் இன்னும் கொஞ்சம் நம்பிக்கை மனதோரம் தொற்றிக் கொண்டது.

"தம்பி ஜங்சன் லெட்சுமி விலாஸ் வந்தோன்ன நிப்பாட்டு" என ஆட்டோ டிரைவரிடம் அம்மா சொல்ல,

"நிப்பாட்றேன் மா" என்றார் ஆட்டோ டிரைவர்.

ஆட்டோ லெட்சுமி விலாஸ் முன்னாடி நிற்கவில்லை அது ஒன்வே என்பதால் கொஞ்ச தூரம் முன்னாலே அரசன் பேக்கிரி முன்னால் நிறுத்தப்படுகிறது.

லெட்சுமி விலாஸிற்கு செல்வதற்காக நான் ஆட்டோல இறங்கும் போது,

"மினி ஜாங்கிரி வாங்கிடுடே, அதான் நிறைய கனிசமா தெரியும், அப்படியே பூ அம்பது ரூபாய்க்கும் ஒரு இருபது ரூபாய்க்கும் லெட்சுமி விலாஸ் முன்னாடி நிக்கும் பாட்டிட்ட வாங்கிரு" என அம்மா சொல்ல, சரி என்றவாறு நானும் லெட்சுமி விலாஸ் போனேன்.

லெட்சுமி விலாஸில் அன்று என்றும் போல் கூட்டமில்லை. கடையில் ஒரு இளம் ஜோடி மட்டும் நின்று பண்டங்களை வாங்கிக்கொண்டிருந்தது அல்வாவும், பால்கோவாவும்.பட்டர் சேவ் என ஆர்டர் போட்டுக்கொண்டிருந்தது.

இதைப்பார்த்த எம்மனம் "நம்மளும் எப்போது இந்த மாதிரி ஜோடியா வந்து பண்டங்கள் வாங்கப்போறோமோ" என தனக்குள்ளே பேசிவிட்டு, அந்த இளஞ்சோடியில் தன் உருவத்தையும், தான் இன்று பார்க்கப்போகும் பெண்ணின் உருவத்தையும் புகுத்திப்பார்த்து சிரித்துக் கொண்டிருக்கும் போதே "சார் என்ன வேணும்" முதலில் மெதுவாக, "சார் என்ன வேணும்" அடுத்து கொஞ்சம் வேகமாக, "சார் என்ன வேணும்" இப்போது சப்தமாக, லெட்சுமி விலாஸ் ஊழியரின் குரல்.

அந்த ஊழியரின் குரலால் நடப் புலகத்திற்கு திரும்பிய நான் "மினி ஜாங்கிரி அரைகிலோ" என்றேன்.

இந்தாங்க என அவர் மினி ஜாங்கிரி பையை நீட்ட, நானும் ரூபாயை நீட்டிட்டு, பையை பெற்றுக்கொண்டேன்.

"பாட்டி ஐம்பது ரூபாய்க்கு மல்லிப்பூக் கொடுங்க என லெட்சுமிவிலாஸ் முன்னாடி நின்ன பாட்டிட்ட வாங்கிட்டே, இன்னொரு இருவது ரூபாய்க்கு தனியா குடுங்க" என்றதும் பாட்டி கொடுத்தார். பணத்த கொடுத்துவிட்டு ஆட்டோவை நோக்கி நடந்தேன்.

இந்த சூழலில் பெண்வீட்டுக்கு போன் செய்து "நாங்க வந்திட்டு இருக்கோம்" என்று அம்மா அவர்களிடம் பேசினார். எல்லாம் நல்லவவிதமாகவே போய் க்கொண்டே இருக்கிறது.

"ஏற்கனவே பார்த்த நூறோட நூத்தி ஒன்னா ஆயிரக்கூடாதே இந்தப்பொண்ணும்"என்ற கலக்கம் மட்டும் எங்கள் மூவருக்கும்.ஆனால் எங்கள் மூவரின் நடவடிக்கையையும் உன்னிப்பாக கவனித்தே வந்தார் ஆட்டோ டிரைவர். ஆனால் எதுவும் பேசாமல் அமைதி காத்தார். அதனால் தான் என்னவோ நாங்கள் பெண் பார்க்க போகும்போதெல்லாம் அவரை அழைத்து விடுவோம்.

ஆட்டோ பெருமாள்புரம் அடைகிறது. பெண் வீடை கண்டுபிடித்தோம். "நாங்க

போன் செய்யும் போது வாங்க" என்று ஆட்டோ டிரைவரிடம் சொல்லியபடி பெண் வீட்டிற்குள் நுழைந்தோம்.

"வாங்க, வாங்க என்றபடி இருவர் வரவேற்க, உட்காருங்க என்று அவர்கள் சொன்னதும், புரிந்து கொண்டேன் அவர்கள் இருவரும் தான் பெண்ணது அப்பா - அம்மாவென்று.

நாங்களும் உட்கார்ந்தோம் வழக்கம் போல் எனக்கு தனி இருக்கை. வாங்கிவந்த மினி ஜாங்கிரியையும், மல்லிகைப் பூவையும் என் அம்மா பெண்ணது அம்மாவிடம் கொடுத்தார்.

அவர்கள் தங்களை அறிமுகப் படுத்திக் கொள்ள, என் அப்பா அம்மா தன்னையும் என்னையும்அறிமுகப்படுத்திக்கொண்டனர்.

# கடவுளுக்கு ஒரு விண்ணப்பம்

மணமகன் வருவானென
மங்கையவள் ஏங்குகிறாள்
மணமாலை தருவானென
மனசெல்லாம் பந்தலிட்டு
மங்கையவள் மயங்குகிறாள்.

வந்து போகும் வருடங்களெல்லாம்
அவள் வயதைக் கூட்டுகின்றன
இளமையைக் கழிக்கின்றன.

இலையுதிர்காலம் மட்டும்
அவள் வாழ்க்கையில்
வந்து வந்து போகிறது
வசந்தகாலமோ
அவள் வாசல்தேடி வருவதேயில்லை.

தண்ணீரில் குளித்துக் குளித்து
தன் காமத்தை அதில்
குறைத்துக் கொள்கிறாள்
கன்னத்தில் வழிந்தோடும் கண்ணீரை
தண்ணீரில் மறைத்துக் கொள்கிறாள்.

மாசில்லை ஒரு மருவில்லை
அன்புக்கும் அழகுக்கும் பஞ்சமில்லை
காசில்லாக் குறையொன்றே
காலமெல்லாம் அவளுக்கிங்கே.

காலத்திற்கும் ஒரு காலம் வருமென
கன்னியவள் காத்திருக்கிறாள்
கடவுள்களே
கருணைக் காட்டுங்கள்!

இவள் உடலில்
மலர் வளையம் வைக்குமுன்னே
இவள் கழுத்தில்
மணமாலை விழ
வழி காட்டுங்கள்!

தேவகுமாரன் வேண்டாம்
ராஜகுமாரன் வேண்டாம்
இரக்கமுள்ள இதயம்கொண்ட
எவனோ ஒருவன் போதும்
கடவுள்களே கருணைக் காட்டுங்கள்.

காஞ்சி. மீனாசுந்தர்
காஞ்சிபுரம்.

எப்போதும் போல எங்கவழியை பத்தி என் அப்பா அம்மா பேச, அவங்க வழியை பத்தி அவங்க பேச பேச்சுக்கள் சுறுசுறுப்பாயின.

இதற்கிடையில் பெண்ணது அப்பா, எனது பேச்சு நடை உடை எப்படியிருக்கு என்பதை தெரிந்து கொள்வதற்காக என்னிடம் பேச்சுக்கொடுக்க, நானும் பதிலளித்தேன்.

“எம்மா நம்ம பொண்ண காபிய எடுத்துட்டு வரச்சொல்லு” என்ற உடனே பெண்ணது அப்பா பெண்ணது அம்மாவிடம் சொல்ல,

மைசூர்பாகையும், மிக்சரையும் குனிந்த தலை நிமிராமல் கொண்டு வந்தும், அடுத்து காபியை கொண்டு வந்து நீட்டினாள் அந்தப்பெண்.

சிலரைப்பார்த்ததும் பிடித்துவிடும். இந்த முகமும் அப்படித்தான். பார்த்ததும் எனக்கு பிடித்துவிட்டது.

முதலில் ஸ்வீட் எடுத்து என் விருப்பக்குறியீட்டைக்காட்டினோம் நானும், என் பெற்றோரும்.

“பெண்ணோடஏதாச்சும்தனியாபேசணும்னா மாப்ளேய போய் பேசிட்டு வரச்சொல்லுங்க” என்று எங்கள் விருப்பக்குறியீட்டை ஏற்றார்கள் பெண் வீட்டார்கள்.

“போய் பேசட்டுமா என்பது போல எனது கண்ஜாடை” என் பெற்றோரை நோக்கி

“பேசிட்டு வாடே” என என் பெற்றோரின் அனுமதி. அவள் வீட்டின் பின்புற தோட்டத்தில் இருவரும் நடந்தபடி பேசத்தொடங்கினோம்.

“எப்டி இருக்கீங்க..என்னைபுடிச்சிருக்கா” என்ற எனது முதல் கேள்விக்கு...

மெதுவாக“நான்நல்லாயிருக்கேன்,உங்கள புடிச்சிருக்கு” என அவள் சொல்லியதும்.இனம் புரிந்த சந்தோசம் எனக்கு.

அதே கேள்வியை அவளும் கேட்க, ரொம்ப பிடிச்சிருக்கு என்ற என் பதிலில் அவளுக்கும் இனம் புரிந்த சந்தோசம் இருந்திருக்கும்.

அவளும் நானும் கிட்டத்தட்ட 10 நிமிடங்கள் மனம்விட்டு பேசி சில கருத்துகளை பரிமாறிக்கொண்டோம்.

“சரி மிச்சத்தை நாம பேசிக்கிடுவோம்” என்றவாறு அப்போதைக்கு விடைபெற்று க்கொண்டோம்.

இதற்குள் பெரியவர்கள் பேச்சில் என்ன நடந்ததோ தெரியவில்லை. அந்த ஹாலில் மௌனம் மட்டும் நிரம்பி வழிந்தது.

“அப்பா எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு, என்றவாறே ஹாலில் எனது விருப்பத்தை நேரிடியாக சொல்லியபடி,

“எனக்கு நகை நட்டு பண்ட பாத்திரம் எல்லாம் எதுவும் வேணாம், ஒரே குடும்பமா இருக்கணும் அது தான் வேணும்” என்றேன் நான்.

“இத எல்லாம் நாங்க பேசிட்டோம்டே நீ பேசாம இரு” என்று என் அப்பா அம்மா. சொல்ல,

“மாப்பிள பாக்க என்னைக்கு வரலாம்” என அவள் அப்பா-அம்மா பேச

“கொஞ்சம் நேரங்குடுங்க கரெக்டா அடுத்த வாரம் புதன் கிழம வாக்குல சொல்றோம்” என்றார்கள் எனது அப்பா-அம்மா.

“எனக்கானா டவுட் அவளும் நானும் வெளியே பேசும் போது எங்க பெற்றோர்கள் என்ன பேசினார்களோ நாங்கள் ஹாலுக்குள் நுழையும் போது இருந்த அமைதி எனக்குள் ஆயிரம் சந்தேகங்களை கிளப்பியது”

‘ஆட்டோவ கூப்பிடுவோமா’ என

அம்மா கேட்க

‘இந்தா இப்போ கூப்பிடுரேன்மா’ என்றபடி போனில் நான் ஆட்டோவை அழைக்க,

ஆட்டோ 2நிமிசத்தில வந்தது. அம்மா அப்பா நான் மூவரும் ஏறினோம். ஆட்டோ கிளம்பியது.

“அப்படி என்ன தாம்மா அங்கன பேசினீர்கள்?”

“நீ சொன்ன எல்லாத்தையும் சொல்லியாச்சிடே நகைநட்டுபண்டபாத்திரம் எதுவும் வேணாம், பொண்ணு மட்டும் வந்தா போதும்” என சொன்னதுமே அவர்கள் நம்மை தவறா எடைபோட்டுவிட்டார்கள்.

ஒரு கட்டத்தில் “மாப்பிள்ளைக்கு ஏதும் பிரச்சனை இல்லீயே” என நேரடியா கேட்ட நேரத்தில்

“சட்டுனு மாப்பிள்ளை இப்படி இருக்கிறது தான் பிரச்சனை” என அவர்கள் வாயை அடைத்த போது தான் நீ ஹாலுக்குள் நுழைஞ்ச டே” என்றார் அம்மா.

“அப்போ நியாயமாகவோ, சுயமாகவோ, யார் வாழ்ந்தாலும் எதுவும் வேண்டாமுன்னு சொன்னாலும் அவங்க மீது மதிப்பு வருவதே இல்லை. சந்தேகம் தானே மிச்சமாம்மா” என சொன்னதும்

“ம்..ம் என தலையில் அடிக்காதபடி ஆமாம்” என்றார் அம்மா.

இப்படி பெண் பார்த்த வீட்டினில் நடந்த நிகழ்வுகளை ஆட்டோவிற்குள் நாங்கள் பேசிப்போனாலும், இது 101வது வீடாகவே எனக்கு மனதில்பட்டது.

‘சரி நடக்கும்... விதி சரியா இருந்தா நடக்கும்’எனமனதிற்குள்பேசிக்கொண்டேன் நான்.

இந்த நேரத்தில், ஆட்டோ டிரைவர் ‘நீங்க அந்த இனம் தானே, எனக்கு தெரிஞ்ச நல்ல குடும்பம் இருக்கு, ஆனால் அவங்க குடும்பத்தோடு நீங்கள் சம்பந்தம் வைப்பீர்களான்னு எனக்கு தெரியாது’.

எந்த ஊரு எந்த வழி சொல்லுப்பா என்றார் என் அப்பா.

உடனே ஆட்டோ டிரைவர், “பொண்ணு

# விரதம்

**தெலுங்கில் எழுதியவர்: உஷா துரகா**
**தமிழாக்கம்: ராஜி ரகுநாதன்**

**காருக்குக் குறுக்கே வந்தவனை**
**வாய் வலிக்கத் திட்டிய அரைமணிக்கு**
**அன்று மௌன விரதம் இருப்பது**
**நினைவு வந்தது**

**இரண்டாவது குலாப்ஜாமூன்**
**தொண்டைக்குள் இறங்கும்போது**
**அன்று உபவாச தீட்சை இருப்பது**
**நினைவு வந்தது**

**ஹாய்... குட் மார்னிங்.. மலர்ந்து சிரித்து**
**சக உத்யோகியை கை குலுக்கிய மறு**
**நிமிடம் அவள் மீது கோபத்தில்**
**நேற்று முதல் பேசாமல் இருப்பது**
**நினைவு வந்தது**

**நான் நோற்கும் விரதமெல்லாம்**
**ஒரு வாழ்நாள் தாமதமாவது ஏனோ**
**தோழி கேட்டாள்**
**விரதத்தில் ஏதோ குற்றம் போல**
**எங்களுக்கு ஏதாவது தானம் கொடு சரியாகும்**
**ஆம்... கொடுக்கலாம்தான்**
**ஆனால்**
**மௌன விரதத்தில் எதை தானம் கொடுப்பது**
**ஒரு சில நிசப்த மணித் துளிகள் தவிர!**

நல்லகலர்,நல்லபடிப்பு,ஆனாகஷ்டப்பட்டுட்டு இருக்குற குடும்பம், அப்பா ஆட்டோ டிரைவர்" என தன் குடும்பத்தை இன்னொரு குடும்பம் போல் சொன்னார்.

"வசதி வாய்ப்பெல்லாம் நாங்க பாக்குறது கிடையாதுப்பா ஆனா பொண்ணு குடும்பத்துக்கு ஏத்த நல்ல பொண்ணாகவும், இவன நல்ல பாத்துக்கிடுற பொண்ணாகவும் இருக்கணும்" என்றபடி ஆட்டோ டிரைவரிடம் என் அப்பா சொல்ல,

"இப்போ கூட நாங்க பாத்த பேமிலி நல்ல பேமிலி, நாங்க எதுவும் வேணாமுன்னு சொன்னதை அவங்க தப்பா நினைச்சதோடு மட்டுமில்லாம என் பையனுக்கு ஏதும் பிரச்சனையாங்கிற மாதிரி பேசியது ஒரு பிரச்சனை ஆயிட்டு" என அம்மா ஆட்டோ டிரைவரிடம் பேச

"ஆமாம்மா, நீங்க மூணு பேரும் பட்ட வருத்தத்தையும், உங்க நல்ல மனசையும் பார்த்து தான் நான் இந்த துப்பையே சொல்றேன்" என்றார் ஆட்டோ டிரைவர்.

அப்பா, அம்மா, நான் மூவரும் வருத்தத்தை உணர்ந்த ஆட்டோ டிரைவர் சொல்லும் இந்தப் பொண்ணாவது அமையணுமே என்ற அடுத்தக்கட்ட கவலையில் என் முகமெல்லாம் கவலை க்கோடுகள். ஆட்டோ எங்கள் வீட்டை நெருங்கியது.

"அம்மா அந்தக் குடும்பத்தில் எல்லோருமே கொஞ்சம் படிப்பறிவு கம்மி, கஷ்டப்பட்ட வீடு தான்மா, நான் தருகிற நம்பர் அநேகமா பொண்ணோட அம்மா நம்பர்" என தன் மனைவி நம்பரை அளித்தார்.

"நம்பரை வாங்கிக்கொண்ட என்



அம்மா பேசிட்டு சொல்றோம். அதுக்கும் நீங்க தான் வரணும்" என்றார் அம்மா. இப்போது ஆட்டோ வீட்டை அடைந்தது.

ஆட்டோவிற்கு டிரைவர் கேட்டதை விட மேல 100 ரூபாய் நான் போட்டு கொடுத்ததும்,

"வேண்டாம் தம்பி, கல்யாணம் முடியட்டும் மொத்தமா வாங்கிக்கிடுறேன்" என அதிகமாக கொடுத்த நூறை திரும்ப அளித்தார்.

வீட்டிற்குள் மூவரும் நுழைகிறோம். உடைகளை எல்லாம் மாற்றிவிட்டு இப்போதும் இன்று பெண் பார்த்த வீட்டையும், அந்தப்பெண்ணை பற்றியும் மட்டுமே பேசிக்கொண்டிருக்க,

அம்மா," ஏம்மா அந்த ஆட்டோ டிரைவர் சொன்ன குடும்பத்தில பேசுலாமே அம்மா" என்றதும்,

"அவர் அடிக்கடி சொன்ன வார்த்தைகள் கஷ்டப்பட்ட குடும்பம் அதை கவனிச்சயாடே" என்றார் அப்பா.

உடனே "ஓரளவுக்காவது அந்த பேமிலி இருக்கணும்லா" என்றார் அம்மா.

"அம்மா நல்ல குடும்பந்தான்மா முக்கியம்" என்றேன் நான்.

"இன்னைக்கு பாத்துட்டு வந்த பொண்ணு" என அப்பா அம்மாவிடம் கேட்டதும்

"வெயிட்டிங் லிஸ்ட்" என சொன்னார் அம்மா.



இப்போது என் அம்மாவின் மொபைல் அடிக்கிறது. பதியப்படாத நம்பர். அம்மா பேசுகிறார். மேரேஜ் அலையன்ஸ் சம்பந்தமான கால். கிட்டத்தட்ட 20 நிமிடம் பேசிவிட்டு வரும் ஞாயிறு பொண்ணை பார்க்க வாரோம் என போனை சிரித்தபடி வைத்தார்.

“டே பேசுனத பாத்தா நல்ல இடமா தெரியுது ஞாயிற்றுகிழமை பெண்பார்க்கப்போவோம்” என்றார் அம்மா.

“அம்மா ஆட்டோ டிரைவர் நம்பர் கொடுத்த இடத்திற்கும் போன் செய்து பார்ப்போமா” என்றேன் நான்.

போன் அடித்தார் அம்மா, பெண்ணது அம்மா பேசினார். “ஞாயிற்றுகிழமை பெண் பார்க்க வாரோம் அது எத்தனை மணின்னு போனில் சொல்றேன் என பேச்சை முடித்தார்” அம்மா.

இதற்கிடையில் வெள்ளிக்கிழமை ஆட்டோ டிரைவர் வீட்டிலிருந்து “உங்க வரவை எதிர்பார்த்து காத்திருக்கோம் முன்னு” போன் செய்தார்.

ஞாயிற்றுகிழமை வந்தது. ஆட்டோ டிரைவரை அழைக்கிறார் அம்மா. நாங்களும் கிளிம்பி ரெடியாக கிளம்பினோம்.

ஆட்டோ வந்தது. ஆட்டோ டிரைவர் யுனிபார்ம் அணியவில்லை.

“என்னப்பா இன்னைக்கு வித்தியாசமா இருக்க” என ஆட்டோ டிரைவரை என் அப்பா கேட்க,

“வீட்டில விசேசம்” என்றார் டிரைவர்.

“அம்மா” என என்னம்மாவை ஆட்டோ டிரைவர் பார்த்ததும்

தம்பி, “ஒரு போனுக்காக வெயிட்டிங் அவங்க போன் பண்ணுவதாக சொன்னார்கள்”

“ஓஹோ..சார் நான் சொன்ன இடம் தானே நான் பேசட்டுமா” என்றார் ஆட்டோ டிரைவர்.

“இல்லைப்பா இது வேற இடம் என்றதும் ஆட்டோ டிரைவரிம் முகம் வாடியது.

“தம்பி அந்த போன்காலை காணோம் அதனால நீ சொன்ன வீட்டுக்கு கிளம்பு” என தனது இரண்டாவது ஆப்சனை முதல் ஆப்சனாக்கினார் அம்மா.

ஆட்டோ டிரைவர் மெதுவாக தன் வீட்டை நோக்கி ஆட்டோவை செலுத்த அவர் வீடும் வந்து சேர்ந்தது.

இப்போது ஆட்டோ நிறுத்தப்பட்டு ஓரங்கட்டப்பட்டு நாங்கள் நால்வரும் இறங்குகிறோம். முதலில் விறுவிறுவென்று தன் வீட்டுக்குள் சென்று, பின் திரும்பி தானும் தன் மனைவியும் இருகைக்கூப்பி வாங்க என வரவேற்றதும்,

“எங்கள் மூவருக்கும் ஷாக், ஐயோ உங்க பொண்ணையா பார்க்க வந்தோம்” என ஒரு வித கூச்சம் எங்கள் முகத்தில் அப்பிக்கொண்டிருக்க, மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டோம்.

ஆனால் எனக்கு மட்டும் ஒன்றே ஒன்று தோன்றியது. இந்தப்பொண்ணை பார்க்காமலேயே ஓகே செய்யணும் என்பது மட்டுமே.

ஆனால் இங்கே எல்லாம் என் முன்னே பேசப்பட்டு, அதன் பிறகே பெண்பார்க்கும் படலம் நடைபெற்றது.

பெண் பிடித்தாகிவிட்டது, எனக்கும் எம் வீட்டிற்கும். எல்லாம் சரியாக நடக்கப்போகிறது என்பது தெரிந்தது. அப்போது முதல் ஆப்சனாய் இருந்து இரண்டாவது ஆப்சனுக்கு தள்ளப்பட்ட வீட்டிலிருந்து போன், அந்த கால் ரிஜக்சன் ஆகவில்லை. ஆனால் மிஸ்ட் கால் ஆகிறது. அதே சூழலில் இங்கே ஒரு மிஸ் மிஸ்ஸாகாமல் எனக்கான மிஸ்ஸர்ஸ் ஆகிறாள்.



# உனக்காக ஒரு கவிதை

உனக்காகக் கவிதை வடித்திடும் போதில்
உள்ளம் தடுமாறித் தவிப்பது ஏனோ
மனதிலே எண்ண அலைகள் மோதிட
வார்த்தைகள் சிக்கித் திணறுவது ஏனோ

வாழ்வில் தீபமாய் ஒளியேற்றிக் கவர்ந்தாய்
வசந்தம் வீசியது உள்ளத்தில் நன்றே
மூழ்கி விட்டேன் உன்றன் நினைவுகளில்
முடிவிலா ஆனந்தம் மனதில் தவழ்கிறதே

நெஞ்சில் ஓராயிரம் வார்த்தை மோதுகிறதே
நினைவில் நாளும் நீங்காமல் நிற்கிறாய்
வஞ்சியே உன்னை எண்ணி கவிதை
வடித்திட ஏனோ வார்த்தைகள் சிக்குகிறதே

கனவில் நாளும் தேனாய் இனிக்கிறாய்
காலம் முழுதும் உனக்காக வாழ்வேன்
தனிமையில் நினைவில் வந்திடும் தேவதையே
தளிரே வெண்மேகமாய் அசைந்து வருவாய்

**நிர்மலா சிவராசசிங்கம்**

# நம்பிக்கை ஒன்று போதும்

துவண்டு போன உள்ளத்தைத் துளிர்க்க செய்யும் வார்த்தை நம்பிக்கை. 'வா வாழ்ந்து பார்' என்று தைரியமூட்டும். தோற்றாலும் பரவாயில்லை மீண்டும் களத்தில் இறங்கு வெற்றி காத்திருக்கிறது என்று சுறுசுறுப்பாக ஓடச்செய்யும். நாக்கு வறண்டு தண்ணீர்க்காகக் காத்திருக்கும் வாழ்க்கை வறண்டு போகும் போதெல்லாம் நம்பிக்கை அருகே வந்து நானிருக்கிறேன் என்று சொல்லும். பட்ட மரத்திற்கு ஒரு துளி மழையும் உயிர்ப்பை தரும் அல்லவா அதுபோலவே பட்ட இதயத்தை நம்பிக்கை உயிர்த்தெழச் செய்யும். சத்தியத்திற்கு எவ்வளவு வலிமையோ அதே வலிமை நம்பிக்கைக்கும் உண்டு. நம்பிக்கை இல்லாமல் எழுவதை விட நம்பிக்கையோடு வீழ்வது சிறப்பு. பெரும் சூறாவளி ஆணிவேரை அசைத்துப் பார்த்துவிட முடியுமா? பெரும் துன்பம் வந்தாலும் நம்பிக்கையை அசைத்துவிட முடியாது.

> **பயணத்தில் இளைப்பாறிய ஞாபகம் விடைபெற்றிருந்தது வெட்டப்பட்ட மரங்கள்!**
>
> **கவிவாணன்**



நடிகர் கே.பாக்கியராஜ்

வளைந்து இளமை இளகிய பின்பும் தன் சோற்றைத் தானே சாம்பாதக்கிற கிழவியைப் பார்க்கும் போதெல்லாம் தோன்றுகிறது நம்பிக்கைக்கு ஆயுள் பலம் உண்டு என்று. திறக்கிற சாவி அடிக்கிற சுத்தி உருட்டுகிற நெம்பு கோல் மாதிரி வாழ்வை மாற்றுகிற சக்திதான் நம்பிக்கை. உன்னால் திறக்க முடியும் உன்னால் ஒடைக்க முடியும் உன்னால் உருட்டி போட முடியும் உன்னால் மாற முடியும் மாற்ற முடியும். நாட்களை நகர்த்த பழக வேண்டாம். நாட்களோடு நகர பழகு. நுகர்த்தப்படுவது ஒருவகையில் ஒதுக்கப்படுவதுதான். நகரப்படுவது பலவழிகளில் ஓங்கப்படத்தான்.

தன் அப்பாவின் இறுதி சடங்கிற்கு பணம் இல்லாமல் கனத்த இதயத்தோடு தவித்த அந்தப் பணமும் அப்பாவின் சட்டை பாக்கெட்டிலேயே இருப்பதை கண்டு விரக்தி அடைந்த மனிதன் இன்று இயக்குநராய் நடிகராய் வெற்றி அடைந்த பாண்டியராஜன் அவர் உயரமானவர் இல்லை. அவருடைய நம்பிக்கைக்கு உயரம் அதிகம்.

'என் பாட்டி சாணம் தட்டுவாள் செருப்பில்லாமல் நடப்பேன் ரிக்ஷா ஓட்டி வாழ்ந்த காலம் நல்ல அனுபவம் என்று தன்னுடைய வாழ்வைப் பற்றி பெருமைபடும் நடிகர் கே.பாக்கியராஜ். விழுந்த இலைகளே மரத்திற்கு உரமாவது போல இவரது வாழ்வே அவருக்கு உரம் போட்டது. நம்பிக்கை திடம் ஆக்கியது.



நடிகர் பாண்டியராஜன்

வாழ்க்கை வாழ முடியும் என்கிற நிகழ்ச்சிக்காகப் பத்திரிகை நிருபர் ஒருவர் தினக் கூலியாட்களை நேக்காணல் செய்ய தேடிக்கொண்டிருந்தார். சாலை ஓரமாக பெண் ஒருத்தி லாரி டயரை பஞ்சர் ஒட்ட கழட்டுவதை பார்த்த பத்திரிகை நிருபருக்கு ஒரு பெண்ணால் லாரி டயரைக் கழட்டி பஞ்சர் ஒட்ட முடியுமா என்று திகைத்து போனார். அருகில் சென்று தான் எதற்காக வந்திருக்கிறேன் என்பதை சொல்லி தன்னை அறிமுகம் செய்து கொண்டார். உங்களுடைய கடின உழைப்பு உண்மையிலேயே பாராட்டிற்குரியதுதான். இந்த கஷ்டத்தை எவ்வாறு உணர்கிறீர்கள்? என்று ஒரு கேள்வியைக் கேட்டார். முதுகு நிமிர்ந்து புருவம் குறுக்கி கண் சுருக்கி சொன்னாள் 'இதை எல்லாம் கடினம் என்று நினைத்தால் வாழ்வதே கடினமாகிவிடும்' என்று. கஷ்டங்களை நம்பிக்கை எளிமையாக்கிவிடும். நம்பிக்கை இருந்தால் பாரதி சொல்வதை போல 'எடுத்த காரியம் யாவினும் வெற்றி எங்கும் வெற்றி எதிலும் வெற்றி'

# மீ... டூ

ஒரு வயலின் இசைக்குள்
எனது மூச்சு அடங்கிப்போனது
யாராரோ வந்து செல்கின்றனர்
உடல்முழுக்க வலியெடுத்து
தலையின் உச்சத்தைத் தொடுகிறது
கால்களின் இடுக்குகளில்
குருதி வழிந்து ஆடையெங்கும்
வண்ணம் தெளித்து வாடையடிக்கிறது
கவலைப்படவில்லை
வீட்டில் எவருமில்லா சூழலில்
மங்கிய விளக்கொளியில்
வாழ்க்கை முடங்கிக்கொண்டிருக்கிறது
இது இலையுதிர்காலம் என்று
சொல்லிக்கொள்கிறார்கள்
சூழல் மிகக் கொடுமையாகி
அங்கமெல்லாம் புழுக்களால்
முடைநாற்றம் வீசத்தொடங்குகிறது
இருவர் என்முன்னே வந்து
மீ டூ பதிவுசெய்ய முடியுமா ?
என்ற கேள்வியோடு நிற்க
வீட்டின் கூரையை அண்ணாந்து
பார்க்கிறேன் ....
கூட்டலும் கழித்தலும் பெருக்கலும்
என்முன்னே வட்டமிட
புள்ளிகள் மட்டும்
தலைமறைவாகின்றன !

**கா.ந.கல்யாணசுந்தரம்**

நம்பிக்கையின் அளவு வெற்றியை அளக்கும். மிகச்சிறந்த மனிதர்களின் வாழ்வியல் நலனுக்கு அவர்களுடைய நம்பிக்கை நல்வழி சமைத்து தந்தது என்றால் அது மிகையில்லை. எல்லாம் முடிந்து தனியாக தவிக்கும் போது ஒரு கடவுளின் சக்தியைப் போல் நம்மை வா என்று எழத் தூண்டிடும். தோற்றுப் போகும் தருணம் வந்தாலும் வெகுவாக நம்முள்ளே நுழைந்து அற்புதம் நிகழ்த்தும். பெரிய ஆள் இல்லை என்பவர்களையும் பெரியவர்களாய் ஆக்கிடும். நம்பிக்கை என்பது வெற்றிக்கு முதல் செங்கல் போன்றது. நம்பிக்கை போன்றதொரு தெம்பு மனத்திற்கு வேறு ஒன்று இருப்பதில்லை. விளையாட்டு வீரனுக்கு சொல்லிக் கொடுக்கப்படுகிற முதல் உத்தி தோற்கும் நேரத்திலும் நம்பிக்கையை

இழக்காதே என்பது தான். இது உத்தி மட்டுமல்ல உரம். விளையாட்டில் கடைசி நேரத்தில் கூட வெற்றி கிடைக்கும் போது வாழ்க்கையில் வெற்றி மாறாதா என்ன?

வாழ்க்கையே வெறுப்பாக இருக்கிறது. என் பெற்றோர்கள் கூட என்னை நம்புவதில்லை. என் தோழிகளும் என்னிடத்தில் சரியாகப் பேசுவதில்லை. மனசு விட்டு பேச கூட யாரும் என் அருகில் இல்லை. சாக தோன்றுகிறது. என்னையே எனக்கு பிடிப்பதில்லை. எனக்கு என்ன ஆயிற்று? நான் என்ன செய்ய வேண்டும்? இது ஒரு மாணவியின் புலம்பல்கள். இதை கேட்ட பிறகு அந்த மாணவியின் மீது பரிதாபமே எனக்கு ஏற்பட்டது. உனக்கு ஒன்றும் ஆகவில்லை. நீ நல்லா தான் இருக்கிறாய். யாரும் உன்னை நேசிப்பதில்லை என்கிற பிரம்மைதான் இருக்கிறது. உனக்கு யாருமில்லை என்கிறாய். உனக்கு நீயே இருக்கும் வேறு யார் தேவை. உன்னை பாதிக்கிற எதை பற்றியும் யோசிக்காதே. உன் வாழ்வை வளப்படுத்த நீ உறுதியோடு இரு. உனக்கு நீயே வழி. உனக்குள் இருக்கும் நல்ல குணங்களை நேசி. ஏதை செய்தாலும் பிரியத்தோடு செய். வாழ்வு வசப்படும் என்கிற நம்பிக்கை கொள். எல்லா மனிதர்களிடத்திலும் உயர்வு தாழ்வு இல்லாமல் பணிந்து போ. வெற்றி பெறுவது மட்டும் வாழ்வு இல்லை. நல்ல செயல்கள்தான் நல்ல வாழ்வாகிறது என்கிற அறிவுரையைத்தான் என்னால் அந்த மாணவிக்கு வழங்க முடிந்தது.



'வாழ்க எம்மான் இவ்வையத்து நாட்டில் எல்லாம்' என்று மோகன்லால் கரம்சந்த் காந்தியை மனதார புகழ்ந்து பாரதி என்னும் புரட்சி மனிதனை வரலாறு மறக்காமல் வைத்திருக்கிறது. சிறைச்சாலைகள் புனிதர்களின் பாதம் பட்ட புண்ணிய ஸ்தலம் என்பான் மகாகவி. ஆங்கிலேய சர்வாதிகார ஆட்சியை தான் எழுத்து தழலில் பயமுறுத்தியதால் ஆங்கிலேய அடக்குமுறைவாதிகளால் 'இனி பாரதி எழுத கூடாது' என்று வஞ்சிக்கப்பட்டான். தேசத்தை காக்க நினைத்தவர்களை அந்த தேசமே காக்க முன்வரவில்லை எனில் அதை விட துரோகம் இருந்து விட முடியுமா? அப்படி துரோகிக்கப்பட்டவன் பாரதி. பாரதி என்றாலே ஒரு நம்பிக்கையும் உறுதியும் நமக்குள்ளே பிறக்கும். எவ்வளவு போராடி தன் வாழ்வை வாழ்ந்தானோ? ஆச்சர்யம் தான். பாரதியின் வாழ்வு நம்பிக்கையால்நிறைந்திருந்தது.

பாரதி கைது செய்து சிறைப்பட்டவுடன் ஜாமீனில் எடுக்க வந்த வக்கீல் 'பாரதி கூடிய விரைவில் உம்மை வெளியே கொண்டு வந்து விடுகிறோம் உமக்கு என்ன வேண்டும் பொழுது போக்கிற்கு?' என்ற போது ஒரு பிரபந்த நூல் வேண்டும். எழுத வெள்ளைக் காகிதம் வேண்டும். நான் எழுதி பார்க்க ஒரு எழுதுகோல் வேண்டும் என்றானாம் பாரதி. எழுத கூடாது என்று ஆங்கில அரசு மிரட்டிய போதும் நான் எழுதுவேன் என்றிருக்கிறான். அது அவனின் நம்பிக்கையால் விளைந்த தைரியம். பாரதிக்கு ஒரு பட்ட பேர் உண்டு 'வாடா மல்லி' என்பது தான் அந்தப் பேர். இறுதி வரையில் வாடாமல் இருந்தவன் பாரதி. நம்பிக்கை அவனை வாட விடவில்லை.

நம்பிக்கை கொள் மனமே...
நம்பிக்கை வாழ வைக்கும்.

**– இசைவாசி**

**மரம் வளர்த்தேன்**
**தண்ணீர் ஊற்ற மறந்தேன்**
**காகிதத்தில் ஓவியமாய்..!**

**ச. ராஜ்குமார்**

# உறவே உயிரே

மலருக்கு மலர் கொடுத்துத் தொடங்கிய காதல்
புலரும் காலைப் பொழுதாய் என்றுமுள்ள காதல்
மலரும் மலர்களிலெல்லாம் தோன்றும் முகமே
நிலவும் வானும் போலே ஒட்டி உறவாடும் காதல்

காதல் உறவில் தோன்றிய என்னுயிரே உணர்வே
சாதல் வரை தொடரும் இது அன்புக் காதலாகுமே
நாதம் இசையாய் நாடி நரம்பெல்லாம் இசைக்குமே
பாதம் முதல் முடி வரை உணரும் அன்புக் காதலிது


உயிரில் உயிராய் ஒன்றிணைந்து உருகிய அன்பே
தயிரில் வெண்ணெய் போல் நானிருப்பேன் மலரே
அயிரை மீனைப்போல் ருசிக்கும் உறவில் வந்தது
துயிலிலும் விட்டுப் போகாத காதல் கனவுகளாய்

உறையும் இதயம் உன்னிதயத்தோடு ஒன்றாகும்
மறையும் காதல் இதயச் சுவற்றுக்குள்ளே இனிதாக
இறையும் இதற்குப் பாதுகாப்புகள் செய்து உதவும்
முறையான உண்மைக் காதலிது உயிரானதே.

நீயின்றி நானில்லை இவ்வுலகில் என்றென்றும்
காயின்றி கனியேதும் கனிந்ததுண்டா உலகில்
தாயின்றி சேயொன்று உலகில் உதித்ததுண்டா
வாயின்றி வயிறு நிறைந்ததில்லை உறவே உயிரே.



ராம்க்ருஷ்



# தலைப்பிரட்டை



விடியக் கருக்கலில
கட்டி வெல்லம் முடிஞ்சிக்கிட்டு
காராம் பசுவோட்டி
மேச்சலுக்குப் போன மவ

பொழுதும் சாஞ்சிருச்சு
பொட்டக்கோழி தூங்கிருச்சு
காரவீட்டு நாய்கூட
மொடக்கிப் படுத்திருச்சு

தவளைச் சத்தத்துக்கு
பாம்பெல்லாம் முழிச்சிருச்சு
தைமாசப் பனிக்கிங்க
தரையெல்லாம் வெடிச்சிருச்சு

சோட்டுக்கிளியெல்லாம்
வீடு திரும்பிருச்சு
பாலுஞ்சிறுக்கி மவ
கூடுவந்து சேரலியே

கொடலங்காட்டு வழி
முத்துப்பேச்சி போகலியாம்
புல்லுமேட்டு வழி
பாத்ததா நெனவில்லையாம்

போனவுக வந்தவுக
எவரும் அறியலியே
யாரோ எவரோ
பாத்தவுக தெரியலியே

இடியே விழுந்தாலும்
எட்டு இட்டிலி திம்பாளே
எழவே விழுந்தாலும்
பசி தாங்க மாட்டாளே

கையில கெடைக்கட்டும்
தொலிய உருச்சுப்புடனும்
கருங்காலிக் கட்ட ரெண்டு
ஒடைய அடிச்சுப்புடனும்

***



தன்னந்தனியாளா
திக்கத்த இருட்டுக்குள்ள
கால்வாரிக் கழுதய
தேடி நானும் போறதெங்க?

ராந்தர் வெளிச்சத்துக்கு
நெழல் கூட பயந்திருக்கு
பாலம் பாலமாத்தா
குதிகாலும் வெடிச்சிருக்கு

தேடி அலஞ்சும்
திரவியத்த காங்கலியே
மாட்டக் கண்டுபுட்டேன்
மவள காங்கக்
கெடைக்கலியே

ரெட்டப்பன மரத்தடி
பக்கமா போனாளோ?
வாய்க்கா கரையோரம்
வழுக்கித்தா விழுந்தாளோ?

ஊரணி பக்கமா
ஒரெட்டு பாக்கலியே
துப்புக்கெட்ட சிறுக்கி
நெனவுக்கு அது எட்டலியே

ஓட்டமும் நடையுமா
மூச்செரச்சு நான் நிக்க
கைதவறி விழுந்த ராந்தர்
சருகெல்லாம் தீப்புடிக்க

பத்தி எறியுதடி
மந்தக்காட்டு கருவேல
எட்டத் தெரியுதடி
பேச்சியும் பாவாடையும்

அய்யோ அம்மா
யாரு இத செஞ்சிருக்கா?
ஊர் கோடி ஐயனாரே
ஒங்கண்ணெண்ன அவிஞ்
சிருக்கா?

பச்சமண்ணு ஒனக்கு
பால்மொகம் மாறலியே
நகக்கீறல் பட்ட எடம்
ரெத்த வாட போகலியே

முட்டக்கண்ணு ரெண்டும்
நெலக்குத்தி நிக்கிதே
மவ ஒடம்பெல்லாம்
பல்தடமா இருக்குதே

மல்லிய மொக்கு ரெண்டும்
கடிபட்டுக் வெடிக்குதே
துணியோட தொலியுஞ்
சேந்து
கிழிபட்டுக் கெடக்குதே

எப்புடி துடிச்சாளோ?
கதறி தவிச்சாளோ?
வலிதாங்க மாட்டாம
மூச்சுத்தெணரிச்
செத்தாலோ?

பன்னெண்டு வருஷமா
ஒன்ன
பாடையில வெக்கவா
வளத்தேன்?
சடங்காகத சிறுக்கி ஒன்ன
எவேங்கிட்ட காவு
குடுத்தேன்?

அரிப்பெடுத்த பாவிக்கு
பிஞ்சும் பழமா தெரிஞ்
சிச்சோ?
காணாப் பொணமாக்கி
பொதருல வீசச்
சொல்லுச்சோ?

ஏழைக்கு ஏது நீதி?
வக்கத்தவளுக்கு ஏது நாதி?
பெத்த வயிறு மட்டும்
பதறி இங்க ஆகுறதென்ன?

காசு
கொழுத்தவனுக்கொல்லாம்
வருசைல போலீசு வரும்
கூலிக்காரி மவ ஒனக்கு
கோடித்துணிதேன் கூட
வரும்

பத்தோட பதுனொன்னா
ஊரு ஒன்னப் பாக்குதடி
எதிரிக்கும் இந்த ரணம்
ஏழு செம்மத்துக்கும்
வேணாமடி

சீராட்டி வளத்த மவளே
செல்லமே போய்வாடி
கொல்லி ஒனக்குப்
போட்டுப்புட்டு
வேகுறது இந்தத்
தாய்தாண்டி

நவீனா

***

# பாடு தம்பி பாடு

பாடு தம்பி பாடு - நம்
பரதப் பெருமை பாடு!
கூடி உழைப்பை நல்கும் - நல்ல
குணத்தார் ஓங்கப் பாடு!

வறுமை முற்றும் மாய்க்கும் - உயர்
வள்ளல் நெஞ்சைப் பாடு!
பொறுமை வாய்மைப் போற்றும் - புகழ்
புனிதர் தம்மைப் பாடு!

இனிய கல்வி கற்கும் தேச
இளைஞர் திறமைப் பாடு!
மனித நேயம் காக்கும் - செயல்
வலியார் பெருமை பாடு!

கவிஞர் இமயபாரதி






# அணிலார்

குட்டிச் சுட்டி அணிலாரே
குள்ள நீள அணிலாரே
குதித்து வளைந்து ஓடுவதேன்
உயர மரத்தில் ஏறுவதேன்
பழத்தை சுவைக்க அவசரமா
பதைபதைக்க ஓடுவதேன்
பத்திரமாய் தரையிறங்கு
பழங்கள் நிறைய தந்திடுவேன்
தின்று ஓடி ஆடிடலாம்.

கவிச்சுடர்
பாலக்கிருட்டிணன் வண்ணமுத்து


# கைவண்ணக் கலைஞர்கள்














Château arc-en-ciel

**7 வயது சிறுமி சானாவின் நீர்வண்ண ஓவியங்கள்**




Château royal

பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
நவம்பர் 2018




5 வயது சிறுவன் ரேஹான் கை வண்ணம்